# இப்னு கல்தூன்

ஸையித் இப்ராஹீம், M.A., L.T.

வளர்மதி பதிப்பகம்

தென்னூர், * திருச்சிராப்பள்ளி.

சோஷியலிஸத்தின் தந்தை
பூலோக வரலாற்று ஆசிரியர்

# இப்னு கல்தூன்

★

MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

ஆசிரியர் :
ஸையித் இப்ராஹீம், எம்.ஏ., எல்.டி.,
ஜமால் முஹம்மத் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

இந்த கித்தாபு/புத்தகம் கிடைக்குமிடம்
அல்-அமீன் புக் டிப்போ
38, தாசில்தார் பள்ளிவாசல் தெரு,
மதுரை-1.

வளர்மதி பதிப்பகம்
தென்னூர் * திருச்சிராப்பள்ளி

உரிமைப் பதிவு] 1961 [ந.பை. 0-75

முதற்பதிப்பு : 1961 அக்டோபர்

## உட்பொருள்


| | | |
|---|---|---|
| 1. | தோற்றுவாய் | ... 1 |
| 2. | வட ஆப்பிரிக்காவில் | ... 14 |
| 3. | அந்தலூஸில் | ... 21 |
| 4. | ஆப்பிரிக்காவில்-பூஜேயில் | ... 25 |
| 5. | உலக வரலாறு | ... 29 |
| 6. | எகிப்து நாட்டில் | ... 32 |
| 7. | ஸுல்தான் தைமூர் | ... 42 |
| 8. | மரணம் | ... 44 |
| 9. | நூல்கள் | ... 45 |
| 10. | முடிவுரை. | ... 58 |


20483

ஜோதி பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி-2.

# முன்னுரை

இஸ்லாமிய வரலாற்றில் பதினான்கு நூற்றாண்டுகளாக எத்தனையோ அறிவு நூல்கள் முஸ்லிம்களால் எழுதப்பட்டிருக்கின்றன. கீழ் நாட்டாரும் மேல் நாட்டாரும் போற்றும்படியாக மேற்கு ஆப்பிரிக்காவில் பிறந்த சரித்திர ஆசிரியர்களில் அப்துர் ரஹ்மான் இப்னு கல்தூன் என்பவரே தலை சிறந்த முஸ்லிம் எழுத்தாளர்.

'சரித்திர முன்னுரை' என்று அவர் எழுதிய அற்புதமான நூலின் காரணமாகத் தனிச் சிறப்புடையோராகத் திகழ்கின்றார். மேலும், ஸோஷியலிசக் குடியரசுகள் உண்டாகிக் கொண்டு வருகின்ற இக்காலத்திலே அந்தக் கொள்கையின் தந்தையான இப்னு கல்தூனுடைய வாழ்க்கை வரலாற்றையும் அவரது கொள்கைகளையும் நாம் அறியவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. மேல்நாட்டாரின் புகழ்ச்சிக்கு உரியோராக நம்மில் ஒருவர் இருந்தால்தான், நாமும் அவரைப் போற்றும் அவ்வளவு தாழ்ந்த நிலை நம்மில் பலரிடம் வந்துவிட்டது. எனவே, மேல்நாட்டாரின் புகழ்மாலைகளும் தரப்பட்டிருக்கின்றன.

உயர்ந்த அறிவாளியும், சரித்திராசிரியரும், தத்துவ ஞானியுமான இப்னு கல்தூனுடைய வாழ்க்கை நமக்கொரு சிறந்த வழிகாட்டியாக ஒளிவீசுமாக !

ஜமால் முஹம்மத் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.
20—10—1961

ஸையித் இப்ராஹீம்.

# குர்ஆன் வசனங்கள்

## இயற்கையும், வரலாறும் அவற்றின் ஆராய்ச்சிகளும்

இந்த மக்கள் ஆராய்ந்து சிந்தனை செய்வதற்காக நீங்கள் (சரித்திரச்) செய்திகளை அவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள்.

* * *

இந்த நிகழ்ச்சிகளில் இறைவனை அஞ்சுவோருக்குப் படிப்பினை இருக்கிறது.

* * *

கண்ணுள்ளோரே! படிப்பினை கற்றுக்கொள்ளுங்கள்

* * *

நீங்கள் பூமியில் சஞ்சாரஞ்செய்து, இறைவனை நிராகரித்தோரின் முடிவு என்ன ஆயிற்று என்று பாருங்கள்! என்று (நபியே!) சொல்வீராக!

* * *

இது இறைவனுடைய (இயற்கைச்) சட்டமாகும். முந்திய மக்களால் இது பின்பற்றப்பட்டது. மேலும், இறைவனுடைய இந்தச் சட்டத்தில் வேறுபாடு காணமாட்டீர். (அஹ்ஸாப்)

* * *

(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய இறைதூதர்கள் இந்தச் சட்டப்படியே நடந்தார்கள். நமது சட்டத்தில் நீர் வேறுபாடு காணமாட்டீர்.

(பனீ இஸ்ராயீல்)

# இப்னு கல்தூன்

(ஹி. 732—808) (கி. பி. 1332—1406)

## 1. தோற்றுவாய்

ஹிஜ்ரி எட்டாம் (கி. பி. பதினான்காம்) நூற்ருண்டிலே, பல ஆண்டுகளாக முஸ்லிம் நாடுகளின்மீது படையெடுத்து, இஸ்லாமையே அழித்துவிட்டதாகப் பெருமிதங் கொண்ட மங்கோல் இனத்தார் தாங்களாகவே முஸ்லிம்களாகிவிட்டார்கள். அதாவது, ஈரானிலும், ருஷியாவிலும், துருக்கிஸ்தானிலும் இருந்த மங்கோலியர் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டார்கள். இஸ்லாத்தை அழிக்கவந்தோர் — பக்தாதில் இஸ்லாமியச் சின்னங்களையெல்லாம் அழித்தோரின் சந்ததிகள் — இஸ்லாத்தின் பாதுகாவலராளுர்கள். இவ்விதமான அற்புதம் இஸ்லாமிய சரிதையில் பலதடவைகளில் நடந்திருக்கின்றது. அதனுல்தான், இஸ்லாமிய சரிதையும் — இஸ்லாமும் — ஓர் அற்புதம் என்று அறிஞர்கள் கூறுகின்ருர்கள்.

இந்த நவ முஸ்லிம்களில் ஒருவரான தைமூர் என்பவர் சீனுவிலிருந்து ருஷ்யாவரை தமது அரசியலை நிறுவிய பிறகு, ஈரான், இராக், துருக்கி முதலிய நாடுகள் மீது படையெடுத்தார். இந்தத் தைமூரால் முஸ்லிமல்லாத நாடுகளை விட, முஸ்லிம் நாடுகளுக்கே மிகுதியான நஷ்டம் விளைந்தது. ஒரு

சர்வாதிகாரிக்கு நாடு சுரண்டும் பேராசை ஏற்பட்டால் அதன் முடிவு உயிருக்கும் பொருளுக்கும் ஆபத்தாகவே முடியுமல்லவா?

அந்த நூற்றுண்டிலே இஸ்லாமியக் கலைகளில் சிறந்தோர் பலர் இருந்தனர். சரித்திராசிரியரும் தத்துவ சாஸ்திரியுமான இப்னு கல்தூன் — ராஜ தந்திரியும், நூலாசிரியருமான இப்னு கதீப்—லோக சஞ்சாரியான இப்னு பதூதா — ஆகியோர் இஸ்லாமிய உலகின் மேற்குப் பகுதியில் சிறந்து விளங்கினுர்கள்.

அபுல் பிதா (Abul Fida) என்ற சரித்திராசிரியர், பல்கலைக் களஞ்சியர் நுவைரீ, நிலநூல் வல்லுனர் உமரீ ஆகியோர் மத்தியப் பகுதியில் புகழ் பெற்றுர்கள். ரஷீதுத்தீன், ஹம்துல்லாஹ் முஸ்தவ்பீ என்ற சரித்திராசிரியர்களும், ஹாபிஸ் என்ற பாரசீகக் கவிஞரும், இஸ்லாமிய உலகின் கிழக்குப் பகுதியில் தலைசிறந்து விளங்கினுர்கள். இந்த நூற்றுண்டிலே மருத்துவத்திலும், கணிதத்திலும் முஸ்லிம்கள் முன்னணியில் இருந்தார்கள். இப்னு கல்தூன் எழுதிய உலக சரித்திரத்தின் முகவுரையானது அன்றும், இன்றும், என்றும், உலக நாகரிகத்தின் தத்துவார்த்தத்திலே முன்னணியில் நிற்கின்றது.

ஐரோப்பாவில், ஸ்பெயின் நாட்டிலே, முஸ்லிம்களுக்கும், வடநாட்டுக் கிறிஸ்தவர்களுக்கு மிடையில் போர்கள் நடந்து கொண்டிருந்தன. முஸ்லிம்கள் தென்பாகத்தில் மட்டும் வலிமையுடன் இருந்தார்கள்.

ஆப்பிரிக்காவிலே, மொரோக்கோ நாட்டில், மரீனி வம்சத்தாரும், மேற்கு அல்ஜீரியாவில் திலிம்ஸானில், ஜியானீ குடும்பத்தாரும் கிழக்கு அல்ஜீரியா, தூனிஸ், திரிப்போலி ஆகிய நாடுகளில் ஹப்ஸி (Hafsi) களும் ஆட்சி செய்தார்கள். ஆனால், மேற்கில், மொரோக்கோவிலிருந்த மரீனி வம்சத்தார் கிழக்கே படையெடுத்து வந்தார்கள். எகிப்து நாட்டில் பஹ்ரீ மம்லூக் வம்சத்தார் ஆட்சி செய்தார்கள்.

நீலநதியின் தென்பாகத்திலும், வடகிழக்கு ஆப்பிரிக்காவிலும், மங்கோலியரும் துருக்கியருமிருந்த மத்திய ஆசியாவிலும் இஸ்லாம் வெகு துரிதமாகப் பரவிக்கொண்டு வந்தது.

ஐரோப்பாவையும் தென்மேற்கு ஆசியாவையும் நோக்கிப் புறப்பட்ட மங்கோலிய மிலேச்ச வெள்ளமானது இஸ்லாமிய அரசாங்கங்களையும், முஸ்லிம்களையும், நகரங்களையும், நாகரீகங்களையும், கலைச் சின்னங்களையும் எண்ணித் துணிந்து திட்டமிட்டதைப் போன்று — முழுமையாக அழித்து விட்டது. இந்தப் பயங்கரமான அழிவிலிருந்து ஆப்பிரிக்காவும், ஸ்பெயினும், அரபியாவும் தப்பி விட்டன.

ஸ்பெயின் நாட்டிலே, கர்னுத்தா அரசாங்கம் ஒன்றே தென்பாகத்தில் இருந்தது. ஸ்பெயினுக்கு தெற்கில், வடமேற்கு ஆப்பிரிக்காவில், முவஹ்ஹித் அரசாங்கம் மூன்று கிளைகளாகி, ஒவ்வொரு கிளையும் அடுத்த கிளையுடன் போரிட்டுக்கொண்டிருந்தது. வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும், மத

வெறி கொண்ட கிறிஸ்தவச் சிலுவைப் போர் வீரர்கள் இவர்களை அழித்துவிடக் கங்கணங் கட்டிக்கொண்டிருந்த அந்தக் காலத்திலே, இவர் கள் தங்களுக்குள் ஒற்றுமையிழந்து கொண்டிருந்த தோடு, ஸ்பெயினிலிருந்த முஸ்லிம்களுக்கு உதவி செய்ய முடியாத நிலைமையிலும் இருந்தார்கள்.

ஐந்து நூற்றுண்டுகளாக பக்தாத் நகரில் நடந்த அப்பாஸி கலீபாக்களின் ஆட்சியானது, செங்கேஸ் கான் உடைய பௌத்திரர் ஹுலாகு கான் என்பவரால் ஹி. 658 (கி. பி. 1258)-ல் அழிக்கப்பட்ட பிறகு, உலக வரலாற்றில் எத்தனை யோ நாகரீகங்களுக்கு உறைவிடமாயிருந்த புராத் — தஜ்லா பிரதேசமானது வனந்தரம் போன்று காட்சியளித்தது. நாசவேலையும், அநாகரீகமும், நிறைந்திருந்த அக்காலத்திலே, முஸ்லிம் கலைச் சின்னங்களும், தலைசிறந்த நூல்களும் அழியாமல் இருக்க முடியுமா?

இந்தச் சூழ்நிலையிலே, ஹிஜ்ரி. 732 ரமலான் மாதம் முதல் தேதியில் (27—5—1332) தூனிஸ் நகரில் அபூ ஜைத் வலியுத்தீன் அப்துர் ரஹ்மான், "இப்னு கல்தூன்" என்பவர் பிறந்தார். ஏறத்தாழ அறுநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன், கல்தூன் என்ற குடும்பத்தார், கல்தூன் இப்னு உத்மான் என்ற ஓர் அரபியரின் தலைமையில், பல அரபிய வீரர்களுடன் வந்து ஸ்பெய்ன் (அந்தலுஸ்) நாட்டிலே கார்மோனு என்னும் நகரிலே குடியேறி னார்கள். கல்தூன் அல்லது காலித் என்ற குடும்பத் தார் சில காலம் அங்கு வசித்து, பிறகு இஷ்பீலியா

(ஸெவில்) நகரத்தில் வசித்தார்கள். அக்காலத்தில் வடநாட்டிலிருந்த கிறிஸ்தவர்கள் மூன்ரும் பர்திஞந்து அரசரின் தலைமையில் முஸ்லிம்களை எதிர்த்துக்கொண்டிருந்தமையால், ஹிஜ்ரி ஏழாம் நூற்ருண்டின் மத்தியில் இந்தக் குடுப்பத்தார் ஸ்பெய்ன் நாட்டை விட்டு, ஆப்பிரிக்காவுக்கு வந்து தூனிஸ் நாட்டில் குடியேறினர்கள். இவ்வாறு தூனிஸ் நகரில் இந்தக் குடும்பத்தார் இருந்த பொழுது தான், இப்னு கல்தூன் பிறந்தார். இவரது அசல் பெயர் அபூ ஜைத் வலியுத்தீன் அப்துர் ரஹ்மான். ஆனல், உலகம் இன்று அவரது குடும்பப் பெயரான இப்னு கல்தூன் என்பதையே அவருக்கு வழங்குகிறது. கல்தூன் குல்தூன், கல்லதூன் என்று பலவிதமாகவும் கூறப் படுகிறது.

முதலில், அந்தலுஸ் நாட்டிலும், பிறகு ஆப்பிரிக்காவில் தூனிஸிலும் இந்தக் குடும்பத்தாருக்கு அரசாங்கத்தில் அதிக செல்வாக்கு இருந்தது இப்னு கல்தூன் உடைய தந்தையின் பெயர் முஹம்மத். இவர் அரசியல் விஷயங்களில் தலையிட விரும்பாமல், நூல்களை வாசிப்பதிலும், அமைதியுடன் அவற்றை ஆராய்வதிலும் தமது காலத்தைக் கழித்தார். கவிதையிலும், இலக்கியத்திலும், பிக்ஹு என்ற இஸ்லாமிய மதச்சட்டங்களிலும், மேலான தேர்ச்சிபெற்றிருந்தார். பிளேக் நோயால் ஹிஜ்ரி 749 (கி. பி. 1349)-ல் அவர் இறந்தபொழுது, அபூ ஜைத் வலியுத்தீன் அப்துர் ரஹ்மானுக்கு வயது பதினெட்டு.

**கல்வி :**

இப்னு கல்தூன், பழம் பெருமை பெற்ற, உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். இந்தக் குடும்பத்திலே பரம்பரையாகக் கல்விமான்கள் நிறைந்திருந்தனர். இந்த உயர்ந்த இலக்கியச் சூழ் நிலையில் வளரும் அபூர்வமான பேறு இந்தச் சிறுவருக்குக் கிடைத்தது.

சிறுவர் இப்னு கல்தூன் உடைய கல்வியிலும் பயிற்சியிலும் அவரது தகப்பனுரே அவருக்கு முதலாம் ஆசிரியரானுர். அக்காலத்தில் இஸ்லாமிய மாணவர் இஸ்லாமியக் கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதையே முதலாவதாகவும், முதன்மையானதாகவும் கற்றுக்கொள்ள முற்படுவர்.

என் பிள்ளை "குட் மார்னிங்!" சொல்லுகிறது. என் குழந்தை "நமஸ்தே!" சொல்லுகிறது. என் செல்வன் "வணக்கம்" என்கிருன், என்று தமது நண்பர்களிடம் கூறிப்பெருமையடிக்கும் முஸ்லிம் தந்தைகள் இன்றும் இருக்கின்றனரல்லரா? "அஸ்ஸலாமு அலைக்கும்" தெரியுமா? என்று கேட்டால் "அதெல்லாம் தெரியாது!" என்று கூறிமுடித்து விடுவார்கள். "கலிமா தெரியுமா?" என்று கேட்டால், தகப்பனுர் தலை குனிவார். அது மட்டுமா? உயர்தரப்பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படிக்கும் மாணவருக்கும் கலிமா தெரியாத பரிதாப நிலைமை அனுபவத்தில் காணப்படுகின்றது. மதக் கல்வி என்பதை, ஆரம்பப்பள்ளிக்கூடங்களிலும் கூட முஸ்லிம் குழந்தைகளுக்கு அளிக்காமையால் ஏற்பட்ட பலன் இந்த இழி நிலை. எத்தனையோ

அனுவசியமான, இறைவனுக்குப் பிடிக்காத, இஸ்லாமிய சம்பந்தமில்லாத, செலவுகளை தனிப் பட்ட நிலைமையிலும், கூட்டாகவும், செய்யும் முஸ்லிம்கள், ஒவ்வோர் ஊரிலும் சொந்த ஆரம்பப் பள்ளிகளை ஏற்படுத்தி, அதைப் பள்ளிவாசல் களுடன் ஒருவிதமாக இணைத்து, முஸ்லிம் சிறு வருக்கும் சிறுமிகளுக்கும், மதக்கல்வி கலந்த ஆரம்பக்கல்வி அளித்தால் எவ்வளவு நன்முக இருக்கும்!

இப்பொழுது, இந்தியாவில் மதச் சார்பற்ற சர்க்கார் ஏற்பட்டு, மதக்கல்வி போதிப்பதற்கு அரசாங்கத்தாரின் உதவி கிடைக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில், முஸ்லிம் பாடசாலைகளில்-அதாவது, சர்க்கார் உதவி (கிராண்டு) பெறும் பாடசாலை களின் நிர்வாகிகள் - காரணமில்லாமல் அச்சங் கொள்ளுகிருர்கள். பாடசாலை நேரங்களுக்கு வெளியில்-அதாவது காலையில் பாடசாலைப் பாடங் கள் ஆரம்பிக்கும் முன்னரும், மாலையில் பாடசாலைப் பாடங்கள் முடிந்த பிறகும், ஞாயிறு, வெள்ளி போன்ற விடுமுறை நாட்களிலும் முஸ்லிம் ஆசிரி யர்களின் உதவியாலும், பள்ளிவாசல் பேஷ் இமாம், முஅத்தின், ஊர் மௌல்விகள், மூலமாக வும், மதக்கல்வி கற்றுக்கொடுத்தால் சர்க்கார் ஆட்சேபணை செய்யமாட்டார்கள்.

பிறமதஸ்தரால் நிர்வகிக்கப்படும் பாடசாலை களில் "ஒழுக்கப்பாடம்" (Moral Instruction) என்று வாரத்தில் பாடசாலை நேரத்தில் ஒன்று அல்லது இரண்டு பாடநேரத்தில் மதப்பெரியோர்

களில் வாழ்க்கை வரலாறு முதலியவற்றைக் கற்றுக் கொடுக்கிறுர்கள். இம்மாதிரியாக, முஸ்லிம் பாடசாலைகளில் இஸ்லாமியப் பெரியோரின் வாழ்க்கை வரலாறுகளை கற்பிக்கலாம். அதற்காகப், போட்டிப் பரீட்சைகள் வைத்து, மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கலாம்.

இப்பொழுது, பாடசாலைகளில் தமிழ் இலக்கியப்பாடங்களில் ஒருவாறு மதபோதனை கற்பிக்கப் படுகிறது. தேவாரம், திருவாசகம், இராமாயணம் மகாபாரதம், திருப்புகழ், பெரியபுராணம் போன்ற பாடங்கள் ஒருவாறு இந்துமதத்தைக் கற்பிக்கின்றன. எனவே, இந்து மாணவ மாணவியருக்கு இத்தகைய பாடங்களின் மூலமாகத் தமது மத அறிவு கிடைத்துவிடுகிறது. இந்துக்களல்லாத மாணவருக்கும் இந்துமதம் ஒருவாறு இப்பாடங்களின் மூலமாகத் தெரிந்துவிடுகிறது. ஆனல் இந்த வாய்ப்பு முஸ்லிம் மாணவருக்குக் கிடைக்கவில்லை.

முஸ்லிம் பாடசாலைகளில் முஸ்லிம் ஆசிரியர்கள் வெகு குறைவாகக் காணப்படுகின்றனர். சில பாடசாலைகளில் முஸ்லிம் ஆசிரியர்களே கிடையாது. முஸ்லிம் பாடாசாலைகளில் முஸ்லிம் தலைமை ஆசிரியரைப் பார்ப்பதும் அருமையாகி விட்டது. இதற்குக்காரணம், நிர்வாகிகளே என்று சொன்னல் அது பிழையாகாது. எத்தனையோ நிர்வாகிகள் தங்கள் பாடசாலையின் சார்பாகத் தங்கள் இனத்தாரை ஆசிரியப் போதனமுறைப் பாடசாலைகளுக்குத் தங்கள் செலவில் அனுப்பி, அவர்கள் தேர்ச்சி பெற்றபிறகு, தங்கள் பாடசாலை

களில் நியமித்துக் கொள்ளுகிறார்கள். இவ்வாறு, முஸ்லிம் பாடசாலை மானேஜர்களும், ஜமாத்தார்களும் செய்யலாமல்லவா? நிர்வாகியின் செலவில் ஆசிரியப் பயிற்சிப் பாடசாலையில் தேர்ச்சியடைந்தோர் முதல் ஐந்தாண்டுகளாவது தனது பாடசாலைகளில் வேலைசெய்யவேண்டுமென்று ஒப்பந்தம் செய்துகொள்ளலாமல்லவா?

முஸ்லிம் பாடசாலைகளில், முஸ்லிம் நிர்வாகிகளும் தலைமை ஆசிரியரும் இன்னொரு விதமாகவும் இஸ்லாமியப் பண்பாடுகளைக் கற்றுக்கொடுக்கலாம், ரம்லான், பக்ரீத், முஹர்ரம், நபிபெருமானார் (ஸல்) பிறந்ததினம், லைலத்துல் கத்ர், லைலத்துல் மிஃராஜ், லைலத்துல் பராத், போன்ற தினங்களையொட்டி இஸ்லாமியப் பெரியோரை வரவழைத்து பாடசாலையில் சொற்பொழிவுகள் நிகழ்த்தலாம்.

பாடசாலை ஆண்டு விழாக்களில், இஸ்லாமிய சம்பந்தமான கட்டுரைப் போட்டிகள், குர்ஆன் ஓதல் (கிரஅத்), இஸ்லாமிய சொற்போர்கள், சொற்பொழிவுகள், வினாவிடைகள் முதலியவற்றில் மாணவர்களுக்குப் பரிசுகள் அளிக்கலாம்.

பரிசுப் புத்தகங்களும் இஸ்லாமிய புத்தகங்களாக இருத்தல் வேண்டும். முஸ்லிம் ஆரம்பப் பாடசாலைகள், நடுத்தரப் பாடசாலைகள், உயர்தரப் பாடசாலைகள், கல்லூரிகள் போன்ற கல்வி நிலையங்களில் ஆண்டுதோறும் ஆண்டுவிழாக்கள் ஒன்றுக்கு மேல் நடக்கின்றன. அச்சமயம் இஸ்லாமியப் நூல்கள் மாணவர்களுக்குப் பரிசாகக் கொடுக்கலாம்.

ஒவ்வொரு பாடசாலையிலும் நூல்நிலையம் (லைப்ரரி) இருக்கத்தான் செய்கிறது. அத்தகைய நூல்நிலையத்திலே மாணவர்கள் வாசிக்கக்கூடிய இஸ்லாமியப் புத்தகங்கள் இருக்கவேண்டும். அவற்றை ஒவ்வொரு வாரமும் மாணவர்கள் வாசிக்கும்படி உதவிசெய்யவேண்டும். அல்லது, ஆசிரியர்கள் வாசித்துக்காட்டி, மாணவர்களுக்கு ஊக்கம் அளித்து, ஆர்வம் உண்டாக்கவேண்டும். மாலையில் மாணவருடன் உலாவப்போகும்பொழுதும் பாடசாலை மைதானத்திலும், புல் மைதானத்திலும், பள்ளிவாசல்களின் திண்ணைகளிலும், உட்கார்ந்து கொண்டு, மாணவர்களுக்குபுத்தகங்களை வாசித்தும் இஸ்லாமிய கதைகள் சொல்லியும், மாணவர்களை முன்னேற்றப் பாதையில் கொண்டுவந்த ஆசிரியப் பெருந்தகைகள் எத்தனையோ பேர் உண்டு என்பதை மறந்துவிடக்கூடாது.

சீர் சீராட்டுக்களிலும், சுருள் வைப்பதிலும், மறுவீடுகளிலும், தலைக்குழந்தைக்குப் பெயர்வைப்பதிலும், காது குத்துவதிலும், சுன்னத்துக்கல்யாணத்திலும், அனுவசியமாகவும், ஆடம்பரத்திற்காகவும், ஊரார் நகைப்புக்கு அஞ்சியும், செலவு செய்யும் முஸ்லிம்களே! உலகம் இன்று இஸ்லாத்தின் பக்கம் திரும்புகின்றது. இஸ்லாமியக் கொள்கைகளைப் பின்பற்றுவிட்டால் — முஹம்மத் (ஸல்) நபியின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவிட்டால், மேல் நாட்டார், — இந்த நவநாகரீக உலகத்தார் - அழிவது நிச்சயம் என்று, பெர்னுட்ஷா போன்ற மேல்நாட்டு மேதைகள் எச்சரிக்கின்றனர். ஆனுல், முஸ்லிம்கள் தங்கள் மதக்கல்வியையும் நபிபெரு

மானாரவர்களின் ஸுன்னத்தையும் புறக்கணித்துத் தன் தாயை மறந்து அண்டை வீட்டுப்பெண்ணைத் தாய் என்பார் போன்று அலைந்தால், அதன் விளைவு எவ்வாறு முடியும்?

நாம் இறைவனுக்கு வழிபடாவிட்டால், பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் வாழ்க்கை வழியின்படி நடக்காவிட்டால், இறைவன் நம்மை அழித்துவிட்டு, அந்த இடத்தில் இன்னொரு இனத்தை உண்டாக்கி விடுவான்! இவ்வாறு குர்ஆன் குறிப்பிடுவதை நாம் மறந்து விடக்கூடாது.

இதுவரை கூறியவற்றால், நமது முன்னேற்றத்திற்குக் கல்வியே அவசியமென்றும், அந்தக் கல்வியின் அடிப்படை இஸ்லாமிய மதக்கல்வியில் இருக்கவேண்டுமென்றும் நாம் அறிந்து கொண்டோம்.

இனி, இப்னு கல்தூனுடைய கல்விக்கு வருவோம். அவரது குடும்பம் பரம்பரையாகக் கல்வியிலும், ஒழுக்கத்திலும், பக்தி நெறியிலும் சிறப்படைந்திருந்ததல்லவா? அக்காலத்திய எல்லா முஸ்லிம் இளைஞரைப் போலவே, அவரும் முதலாவதாக குர்ஆன் ஓதினார். பிறகு, அதைப் பாராயணம் செய்தார். பிறகு, குர்ஆனை இன்னிசையுடன் ஓதும் "கிரஅத்" என்ற கலையைக் கற்றார். பிறகு, "தப்ஸீர்" என்ற குர்ஆன் விளக்கத்தைக் கற்றார். அதற்குப் பிறகு, நாயகவாக்கியக்கலையான ஹதீதைக் கற்றார். அதற்குப் பிறகு, பிக்ஹு என்ற இஸ்லாமிய சட்டதிட்டங்களைக் கற்றார். பின்னர்,

அரபி மொழியில் இலக்கணம், சொற்பொழிவு ஆகியவற்றைக் கற்றூர். இவற்றையெல்லாம் பல ஆசிரியர்களிடம் திறமையுடன் கற்று முன்னேறினூர். அவருக்குக் கவிதைத் திறனும் உண்டாயிற்று. பொதுவாழ்க்கையில் ஈடுபட்ட பிறகு, தர்க்க சாஸ்திரம், தத்துவசாஸ்திரம் இவ்விரண்டையும் கற்றுத் தேர்ச்சிபெற்றூர்.

இப்னு கல்தூனுக்குப் பதினெட்டாம் பிராயம் வந்தபொழுது அவரது கல்வியின் வேகம் திடீர் என்று தடுக்கப்பட்டுவிட்டது. ஹி. 749 (கி. பி. 1349)ல் ஆசியா, ஆப்பிரிக்கா ஐரோப்பா இந்த மூன்று கண்டங்களிலும் கொடுமையான பிளேக் நோய் தோன்றியது. இதனூல், இலட்சக்கணக்கான மக்கள் கிழக்கே சீனு எல்லேயிலிருந்து மேற்கே மொரோக்கோவரையில் மாண்டு மடிந்தார்கள்.

தூனிஸ்

அப்பொழுது, இப்னு கல்தூன் தமது பெற்றேருடன், தூனிஸில் வசித்து வந்தார். இந்தப் பயங்கரமான நோயினூல் அவரது பெற்றேரும், அவரது ஆசிரியர் பலரும், தூனிஸ் நகர வாசிகளில் பெரும்பாலோரும் இறந்துவிட்டார்கள். எத்தனேயோ நகரங்களும், கிராமங்களும் மனித சஞ்சாரமில்லாதவைபோலத் தோன்றின. இந்தக் கொடிய நோயின் பலனுக விவசாயம், வியாபாரம், முதலியன பின்னடைந்தன. பண்ணேயாட்கள், தொழிலாளிகள், முதலியோர் இலட்சக் கணக்கில் இறந்தார்கள். இதைக் கண்டு, ஆண்டவனுடைய

சாபம் உலகில் வந்துவிட்டதென்றும், உலகின் இறுதிக் காலம் வந்துவிட்டதென்றும் அஞ்சினோர் பலர். சமுதாயத்தில் ஒவ்வொரு துறையில் அரசன் முதல் ஆண்டிவரையில் ஆணும் பெண்ணும் அந்தப் பைசாச நோய்க்குப் பலியானார்கள்.

இப்னு கல்தூன் நன்றாகப் படித்து, கல்வி கேள்விகளில் சிறப்படைந்து, அறிவுப் பிராயத்தை அடைந்தபொழுது — திடீரென்று பெற்றோரும், ஆசிரியரும், நண்பரும், உறவினரும், இந்தத் தொத்து நோய்க்குப் பலியானது அவர் தலையிலே கோடையிடி குமுறிக்கொண்டு விழுந்ததுபோல் இருந்தது. அந்த அதிர்ச்சியிலிருந்து அவர் தப்ப முடியவில்லை. தாங்க முடியாத அந்தத் துயரக் கடலிலிருந்து அவர் கரையேற முடியவில்லை. மனக் கலக்கத்தால் வாடினார். அமைதியை இழந்தார். பொறுமையையும் இழந்தார். ஏமாற்றமடைந்து பைத்தியம் பிடித்தவரைப்போல் காணப்பட்டார். வேரோடு பிடுங்கப்பட்ட செடியைப்போல்—மழை முகம் காணாத பயிரைப்போல் — பெற்றோரையும் ஆசிரியர்களையும் காணாமல் வாடினார்.

எனவே, அவருக்கு அந்த தூனிஸ் நகரில் இருக்கவோ, தமது கல்வியைத் தொடர்ந்து கற்கவோ பிரியமில்லை. அங்கிருந்து மேற்கே சென்று மொரோக்கா நாட்டில் வசிக்கத் திட்டமிட்டார். என்றாலும், அவரது சகோதரர்களில் முதல்வரான முஹம்மத் என்பவர் அவரைப்போகவேண்டாமென்று தடுத்துவிட்டார்.

## 2. வட ஆப்பிரிக்காவில்

### (ஹி. 751—764 கி. பி. 1351—1362)

ஹிஜ்ரி எட்டாம் (கி. பி. பதினுன்காம்) நூற்ருண்டிலே வடமேற்கு ஆப்பிரிக்க நாடுகள் ஒரே மன்னரால் ஆளப்பட வில்லை. ஒரு காலத்தில் முவஹ்ஹிதீன் ஸுல்தான்களால் ஆளப்பட்டு வந்த நாட்டிலே பல சிற்றரசர்கள் பல பிரிவுகளுக்கு தலைவர் (அமீர்) களாக இருந்தார்கள்.

இந்தச் சிறு நாடுகள் சிலவற்றிலே இப்னு கல்தூன் உயர்ந்த உத்தியோகங்களைப் பெற்ருர். முதலாவது, அவரது இருபதாம் வயதில், அப்பொழுது தூனிஸிலிருந்த வாலிப வயதுள்ள ஸுல்தான் அபூ இஸ்ஹாக் என்பவரது சொந்தச் செயலாளராக வேலை பார்த்தார்.

ஹிஜ்ரி ஏழாம் நூற்ருண்டிலே வட ஆப்பிரிக்காவும் ஸ்பெயின் நாடும், முவஹ்ஹிதீன் குடும்பத்தாரால் திறமையுடன் ஆட்சி செய்யப்பட்டு வந்தன. அவர்களது அரசாங்கம் அழிந்தபின் வட ஆப்பிரிக்காவில் பல சிற்றரசுகள் தோன்றின.

மேற்கே, மரீனீ — அரச வம்சத்தார் மொரோக்கா, பஸ் (Fez) என்னும் பிரதேசங்களை ஆண்டு வந்தார்கள். இவர்களது தலைநகர் பஸ்.

தூனிஸ் பிரதேசத்தில் ஹப்ஸ்(Hafs) குடும்பத்தாரின் ஆட்சி நடந்தது.

அல்ஜிரியா, திலம்ஸான், பிரதேசங்களிலே அப்துல் வத் குடும்பத்துச் சிற்றரசர் ஆண்டார்கள். இவர்களது தலைநகர் திலம்ஸான்.

இவற்றில் மரீனீ குடும்பத்தைச் சேர்ந்த ஸுல்தான்கள் வன்மை மிகுந்தோராக இருந்தார்கள். இந்த அரசாங்கத்தை நிறுவியவர் அபூ யூஸுப் யாகூப் பின் அப்துல் ஹக் என்ற ஸுல்தான். இந்தக் குடும்பத்திலே திறமையுள்ள பல ஸுல்தான்கள் தோன்றினர்கள். ஹி. 731 (கி. பி. 1330)-ல் பட்டத்திற்கு வந்த ஸுல்தான் அபுல் ஹஸ்ஸான் என்பவர் அல்ஜீரியா நாட்டை அப்துல் வத் குடும்பத்தாரிடமிருந்து வென்ருர். பிறகு, அதற்கு அடுத்திருந்த தூனிஸ் பிரதேசத்தை ஹப்ஸ் குடும்பத்து ஸுல்தான் உமர் பின் அபீ எஹ்யா என்பவரிடமிருந்து வென்ருர். வென்ற பிறகு, அங்கு இரண்டு ஆண்டுகள் தங்கி, நிர்வாகத்தைச் செம்மையாக்கினர். இதற்குள் அவரது ஆட்சியில் இருபது ஆண்டுகள் கழிந்தன.

ஹிஜ்ரி 750-ல், மொரோக்காவில் அராஜகக் கலகங்கள் உண்டாயின. உடனே, அதை அடக்க, தூனிஸிலிருந்து அவர் மொரோக்கா சென்ருர் அவர் சென்றவுடன், முன்னர் தூனிஸ் பிரதேசத்தின் ஸுல்தானுன உமர் பின் அபீ எஹ்யாவின் புத்திரர் மல்லா பதல் (Fadal) என்பவர் படையெடுத்து தூனிஸை வென்ருர். ஆனுல், அவரது மந்திரியான இப்னு தப்ரகீன் (Tafrakin) என்பவர் அவரைத் துரத்தி, அவரது இளைய சகோதரர் அபூ இஸ்ஹாக் என்னும் இளவயதுடையவரை ஸுல்தான் என்று விளம்பரப்படுத்தி, தாம் அவருடைய பாதுகாவலர் என்ற திறை மறைவில் தனியாட்சி செய்தார்.

ஸுல்தான் அபூ இஸ்ஹாக் என்ற இந்த சிறுவனுடைய முத்திரை பொரிக்கும் செயலாளராகத் தான் (Seal Bearer) இப்னு கல்தூன் முதலில் உத்தியோகம் பெற்ருர்.

வட ஆப்பிரிக்காவிலும், ஸ்பெய்ன் நாட்டிலும் அரசுகளும், சிற்றரசுகளும் அடிக்கடித் தோன்றியும் மறைந்துகொண்டுமிருந்த அக்காலத்திலே அந்த ஸுல்தான்களும், அமீர்களும் ஒற்றுமை இழந்து, ஐரோப்பாவில் அப்பொழுது பேராபத்திலிருந்த முஸ்லிம்களுக்கு உதவி செய்யாமல் தங்களுக்குள் போர்புரிந்து, தாங்களும் அழிந்து, ஸ்பெய்ன் நாட்டிலிருந்த முஸ்லிம் அரசாங்கத்தையும் அழிக்க ஒருவாறு உதவி செய்தார்கள். ஆனல் அதே சமயத்தில் ஐரோப்பாவில் பல கிறிஸ்தவ அரசர்கள் ஒன்றுபட்டு, ஐரோப்பாவிலிருந்த முஸ்லிம் அரசாங்கத்தை — 800 ஆண்டுகளாக அவர்களுகது நாகரீகக்கல்வியை அளித்து அவர்களை உயர்த்திய முஸ்லிம் அரசாங்கத்தை அழிக்க வந்த அந்த நெருக்கடியான வேளையிலே, உலக சகோதரத்துவத்தைப்போதிக்க வந்த முஸ்லிம்கள் இவ்வாறு இழிநிலை யடைந்திருந்தார்கள்.

இந்த முஸ்லிம் சிற்றரசர்கள் பயங்கரமான காட்டு மிருகங்களைப் போல் போரிட்டு அழிந்து கொண்டிருக்கையிலும், அவர்களுடைய அரசவைகள் அறிஞர்களையும், விஞ்ஞானிகளையும், மதபோதகர்களையும், பேராசிரியர்களையும் போற்றி, அவர்களுக்கு ஆதரவு அளிக்கப் பின்வாங்கவில்லை. அப்பொழுது, ஸ்பெய்ன் நாட்டிலிருந்தும் பல முஸ்லிம்

கல்விமான்கள் கடல் கடந்து ஆப்பிரிக்காவுக்கு வந்துவிட்டார்கள். இவர்களெல்லாம், எந்தெந்த முஸ்லிம் ஸுல்தானுடைய அரசவையில் தங்களுக்கு ஆதரவு கிடைக்குமோ அங்கெல்லாம் சென்று வசிப்பார்கள். ஒரு சிற்றரசு பலவீனமடைந்தால், அல்லது அழிந்தால், அதை வென்ற ஸுல்தான் இந்த கல்விமான்களைத் தமது அரசவைக்கு அழைத்து ஆதரிப்பார்.

இந்தச் சூழ்நிலையை நாம் நன்கு அறிந்து கொள்ளவேண்டும். அதை நாம் நன்கு அறிந்து கொண்டால்தான், இப்னு கல்தூனுடைய இயக்கங்களின் காரணத்தை நன்கு அறியலாம். ஏனென்றால் இப்னு கல்தூனுடைய இனிவரும் வாழ்க்கை வரலாற்றிலே, அவர் ஒரு ஸுல்தானை விட்டு, மற்றொரு ஸுல்தானிடமும், ஒரு சிற்றரசை விட்டு மற்றொரு சிற்றரசின் அவைக்கு ஏன் சென்றார் என்ற உண்மை நமக்குத் தெள்ளிதில் புலப்படும்.

தூனிஸிலே ஹப்ஸ் அரச வம்சத்தாரும், மொரோக்கோவிலே, மரீனி அரச வம்சத்தாரும் அக்காலத்தில் அதிகமாகப் புலவர்களைப் போற்றி வந்தார்கள். அவர்களுக்கு அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகள் கொடுத்து ஆதரித்தார்கள். நம்பிக்கையுள்ள உத்தியோகங்களைக் கொடுத்தார்கள். பிற நாடுகளுக்கும், வேற்று அரசர்களிடமும் தூதுவர்களாக அவர்களை அனுப்பினார்கள். மந்திரிகளாகவும் நீதிபதிகளாகவும் அத்தகைய சான்றோரை நியமித்தார்கள். தங்கள் சேனைகளுக்குத் தளபதிகளாகவும் நியமனம் செய்தார்கள். இந்தப் பெருமக்களின்

அறிவாலும், கல்வியாலும் பயன் பெற்ருர்கள். தங்கள் நாட்டுக்கும் அரசாங்கத்திற்கும் அவர்கள் மூலமாகப் புகழ் கிடைக்கும்படி செய்தார்கள்.

கல்விமான்கள் இவ்வாறு இடம் பெயர்ந்து, நாடுகடந்து, அடுத்த நாடுகளுக்குச் செல்லும் ஓர் அறிவு நீரோட்டத்தில்தான் இப்னு கல்தூனுடைய குடும்பம் ஸ்பெய்ன் நாட்டிலிருந்து, தூனிஸுக்கு வந்து அங்கு சுமார் ஒரு நூற்ருண்டு வரையில் ஹப்ஸ அரச வம்சத்தின் ஆதரவில் சிறப்புடன் இருந்தது.

ஆனல், மொரோக்கோ ஸுல்தான் அபுல் ஹஸ்ஸானல் வெல்லப்பட்ட பிறகு, தூனிஸிலிருந்த இஸ்லாமிய அறிஞர்கள்—இப்னு கல்தூனுடைய தோழர்கள் — கீழ் நோக்கிச் செல்லும் தூனிஸ் அரசவையைவிட்டு, வன்மையுடனும், வெற்றியுடனும் சிறந்து விளங்கிய மொரோக்கோ ஸுல்தானுடைய தர்பாருக்குச் செல்ல ஆரம்பித்தார்கள். புகழும், செல்வமும், மொரோக்கோவில் வளர்பிறை போன்று வளர்ந்துகொண்டிருந்தமையால், இப்னு கல்தூனும் அந்த நாட்டிற்குச் செல்ல நினைத்திருந்தால், அது நமக்கு வியப்பாகத் தோன்றவில்லை. மன்னர்க்குத் தன்தேசமில்லையேல் தனிச் சிறப்பில்லை. ஆனல், மாசறக் கற்ருேருக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பே கிடைக்கும்.

**ஸுல்தான் அபூ இனன்**

மொரோக்கோ நாட்டில் ஸுல்தான் அபுல் ஹஸன் ஹி. 752-ல் இறந்து, அவரது புத்திரர் ஸுல்தான் அபு இனன், வெகு திறமையுடனும்

திட்டத்துடனும் ஆட்சி செய்து கொண்டிருந்தார். தமது தகப்பனுரால் வெல்லப்பட்ட பிறகு சுவாதீனமாகிவிட்ட அல்ஜீரியா நாட்டை அவர் மறுபடியும் வென்முர். அதன் தலைநகரமான திலம்ஸானில் நுழைந்தார்.

இதற்கிடையில், இப்னு கல்தூன், தேய்பிறை போன்றிருந்த தூனிஸிலிருந்து வெளியேறி, திலம் ஸானிலிருந்த ஸுல்தான் அபூ இனுணைச் சந்தித் தார். அந்த ஸுல்தான் அவரை வரவேற்று, ஆதரவளித்தார். ஹி. 755 (கி. பி. 1354) ல் அந்த ஸுல்தானுடைய தலைநகரமான பஸ் (Fez) நகருக்கு இப்னு கல்தூன் வந்தார். படிப்படியாகப் பட்டங் களும் பதவிகளும் பெற்முர். இறுதியாக, ஸுல்தா னுடைய சொந்தக் காரியதரிசியாகவும் அமர்ந்தார்.

இப்னு கல்தூன் ஒரு மாணவர். பெற்றோரையும் ஆசிரியரையும் இழந்தமையால் அவரது கல்வி நின்றுவிட்டதல்லவா? ஆப்பிரிக்காவிலும் அந்த-லுஸிலுமுள்ள பெரிய அறிஞர்கள், பஸ் நகரில், வந்து கூடியிருந்தார்கள். எனவே, அவர்களிடம் பாடங்கேட்டு, இப்னு கல்தூன் தமது அறிவைப் பெருக்கினுர். அப்பொழுது அவருக்கு வயது இருபத்திரண்டே. ஆனுல், மதியிலும், மன உறுதியி லும், உயர்ந்த குறிக்கோளிலும், அதிகார ஆவலி லும், பொருளும் பதவியும் பெறுவதிலும், அவர் முன்னணியில் இருந்தார். ஆற்றலும் அறிவும் படைத்தோர் எத்தகைய இடுக்கண் வந்தாலும், அதை ஓர் அணுவென்று தள்ளிவிட்டு முன்னேறு வார்களல்லவா? அத்தகைய நுண்மதியாளர், அரிய

ஆற்றல் படைத்தவர் இப்னு கல்தூன். எனவே, அடுத்த முப்பது ஆண்டுகளில் அவரது வாழ்க்கை என்னும் கப்பலானது கொந்தளிக்கும் கடலிலே, மலைபோல் எழுந்து மறுபடியும் விழும் அலைகளிலே தாவித் தாவிச் செல்லுகிறதை நாம் பார்ப்போம். சில சமயம் கப்பல் புயலில் அகப்படும். சிலவேளை கருமேகங்களிலும் இடி மின்னல்களிலும் அகப்படும். சிலசமயம் நல்ல சூழ்நிலையிலே, கடலில் பாய்ந்தோடும். இப்படியெல்லாம் அவரது வாழ்க்கையில் பல மாற்றங்களை நாம் காண்போம்.

இவ்வாறிருக்க, இடையில், அந்தலூஸிலிருந்து வந்த ஸுல்தான் அபூ ஸலீம் (ஸலாம்) என்பவரால் மொரோக்கா நாடு வெல்லப்பட்டது. இந்த ஸுல்தான் காலத்திலே இப்னு கல்தூனுக்கும் பல வகைகளில் உயர்வு கிடைத்தது. அரசியல் துறையிலும், இலக்கியத் துறையிலும் அவரது புகழ் வட ஆப்பிரிக்காவிலும், ஸ்பெய்ன் நாட்டிலும் பரவியது. ஸுல்தான் அபூ ஸலீம் காலத்தில் இப்னு கல்தூன், பிரதம நீதிபதியாக உயர்த்தப்பட்டார்.

ஹி. 762 (கி. பி. 1361-ல்) அக்கால அரசியல் குழப்பங்களில் ஒரு அரசியல் சூதாட்டம் நடந்தது. அதன் பயனாக, உமர் பின் அப்துல்லாஹ் என்ற மந்திரி தமது ஸுல்தான் அபூ ஸலீமைத் துரத்தி விட்டுத் தாமே ஸுல்தான் ஆனார்.

இப்னு கல்தூனுக்கு இந்தப் புதிய ஸுல்தானிடம் இருக்கப் பிரியமில்லை. எனவே அங்கிருந்து, அனுமதி பெற்று, அந்தலுஸ் (ஸ்பெய்ன்) நாட்டிற்குப் புறப்பட்டார்.

# 3. அந்தலூஸில்

அச்சமயம், அந்தலுஸ் (ஸ்பெய்ன்) நாட்டின் நிலைமை என்ன? அதற்குமுன் சுமார் ஆறு நூற்றுண்டுகளாக அந்த நாடு முஸ்லிம்களின் ஆட்சியிலிருந்தது. அந்த நாட்டுமக்களது பொருளாதார, சமுதாய, ஒழுக்க, வாழ்க்கையானது இஸ்லாமிய ஆட்சியில் சிறப்படைந்தது. அந்த நாட்டிற்கும் அந்தக் காலத்திலே நாகரீகமற்றிருந்த இதர ஐரோப்பிய நாடுகளுக்கும், இந்த இஸ்லாமிய அரசாங்கத்தின் மூலமாக, இலக்கியம், விஞ்ஞானம் சிற்பம், மருத்துவம், கணிதம், வானசாஸ்திரம், தர்க்க சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம் முதலான பல துறைகளில் ஒளியும் சிறப்பும் கிடைத்தது. சுருங்கக் கூறினுல், இருண்ட காலங்கள் என்று சொல்லப்பட்ட மத்திய சரித்திர காலங்களில் வசித்த ஐரோப்பியரின் ஆசிரியர்கள் முஸ்லிம்களே.

இத்தகைய பெருமையுள்ள முஸ்லிம்கள் அப்பொழுது அந்த நாட்டில் ஒற்றுமை, நம்பிக்கை, கட்டுப்பாடு, சகோதரத்துவம், முதலிய பெருங் குணங்களை இழந்தனர். ஒன்றுபடாத நிலைமையில் தங்களுக்கிடையில் பகைமையையும் போர்களையும் கண்டார்கள். இதைக்கண்ட ஐரோப்பியர் மகிழ்ச்சி யடைந்தார்கள். மதவெறிபிடித்த ஐரோப்பியக் கிறிஸ்தவர்கள், போப் பாதிரியாரின் தூண்டுதல் காரணமாக, இலட்சக்கணக்கில் அரபியா நாட்டை நோக்கிச் சென்று முஸ்லிம்களுடன் “சிலுவைப்போர்” செய்தார்கள். ஆனுல் அந்தப் போர்களில் அவர்களுக்கு வெற்றி கிடைக்க

வில்லை. எனவே, தென்மேற்கு ஐரோப்பாவிலிருந்த முஸ்லிம்களை அழித்துவிடத் தயாரானார்கள். அந்தலுஸ் நாட்டின் வடபாகத்தில் மலைகளில் இருந்த மதவெறியரைத் தூண்டினார்கள். ஸ்பெய்ன் நாட்டில் முஸ்லிம்கள் பிரிந்திருப்பதைக்கண்டு, ஆசை வார்த்தை காட்டி அவர்களில் சிலரைத் தங்களுடன் சேர்த்துக்கொண்டு, ஸ்பெய்ன் நாட்டு முஸ்லிம்களையும், இஸ்லாமிய அரசியலையும், இஸ்லாமிய நாகரீகத்தையும் அழிக்க ஆரம்பித்தார்கள். இறுதியாக, இதில் அவர்கள் வெற்றியையும் கண்டார்கள்.

ஹிஜ்ரி எட்டாம் (கி. பி. பதினான்காம்) நூற்றுண்டின் ஒருபாதி முடியும் சமயத்திலே, ஸ்பெய்ன் நாட்டின் தென்பாகத்தில்மட்டும் கர்னுதா(Granada) என்ற ஒரு முஸ்லிம் சிற்றரசு இருந்தது. அதையும் பலவிதத் துன்பங்கள் சூழ்ந்து நின்றன. அந்த ஆபத்தான நிலைமையிலும், அதன் தலைநகர் கர்னுதாவிலே ஆட்சிசெய்த ஸுல்தான்கள் சிறந்த கல்விமான்களாக இருந்ததோடு, நாட்டின் பற்பல பாகங்களிலிருந்து, தங்களிடம் அடைக்கலம் புகுந்த கல்விமான்களுக்கு அன்புடன் ஆதரவளித்தார்கள். இந்த ஸுல்தான்களுடைய வள்ளல் தன்மையை அறிந்து ஆப்பிரிக்காவிலிருந்த பல மேதைகள் அவர்களது தர்பாருக்கு வந்தார்கள். அவ்வாறு வந்தோரில் இப்னு கல்தூனும் ஒருவர்.

ஹிஜ்ரி 755 (கி. பி. 1354ல்) பட்டத்திற்கு வந்த முஹம்மத்–பின் யூஸுப்–பின் – இஸ்மாயீல் பின்– அல் அஹ்மர் அல் நஸ்ரீ என்பவர் அப்பொழுது

அந்தலூஸில் கர்னுதா நகரைத் தலைமையாகக் கொண்டு ஆட்சி செய்துகொண்டிருந்தார்.

இவரது ஆட்சியின் ஆரும் ஆண்டிலே இந்த ஸுல்தான் முஹம்மதுடைய சகோதரர் இஸ்மாயீல் என்பவர் இவரை கர்னுதாவிலிருந்து துரத்திவிட்டுத் தாமே ஸுல்தான் என்று விளம்பரப் படுத்தினர். எனவே, ஸுல்தான் முஹம்மத் அங்கிருந்து அகதியாக ஆப்பிரிக்காவுக்கு வந்து, அப்பொழுது மொரோக்கோவில் ஸுல்தானுக இருந்த அபூ ஸலாம் என்பவரால் வரவேற்கப்பட்டார். இந்த அபூ ஸலாம் ஒரு காலத்தில், மொரோக்கோவிலிருந்து, அகதியாக, கர்னுதா சென்றுர். அப்பொழுது முஹம்மத் என்ற இதே கர்னுதா ஸுல்தானுல் ஆதரிக்கப்பட்டார்.

இந்த வரவேற்பிலே இப்னு கல்தூனும் கலந்து கொண்டார். அன்றைய வட ஆப்பிரிக்க, இலக்கிய அரசியல் உலகிலே இப்னு கல்தூன், உச்ச நிலை பெற்றிருந்தாரல்லவா? அதைப்போலவே, அகதி ஸுல்தான் முஹம்மத் என்பவருடன் வந்த அவரது மந்திரிகளில் ஒருவரான, லிஸானுத்தீன் இப்னுல் கதீப் என்ற முஹம்மத் பின் அப்துல்லாஹ் பின் ஸயீத் என்பவர் (ஹி. 713-766 கி. பி. 1323-1374) அந்தலூஸ நாட்டிலே இலக்கியத் துறையிலும், அரசியல் துறையிலும் முதலிடம் பெற்றிருந்தார். மந்திரி இப்னுல் கதீப் என்பவரும் இப்னு கல்தூனும் எழுத்தாளர்,கவிஞர், அரசியல் வாதி,போன்றதுறைகளில் ஒரே புகழ்பெற்று விளங்கினுர்கள். இருவரும் உலகிற்குப் பல நூல்கள் தந்துதவினுர்கள்.

அந்த வரவேற்பின் பொழுது இரு மேதைகளும் சந்தித்தார்கள். அக்கால சிந்தனையுலகின் இரு சிற்பிகளும், இரு எழுத்தாளரும் ஒருவரை ஒருவர் தழுவி ஆலிங்கனஞ் செய்து உள்ளன்புடன் உறவு கொண்டார்கள். இருவரும் மந்திரிகளாக இருந்து சில சமயம் அரசாங்கத்தை நடத்தியோர். அக்கால அரசியலுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள். இவ்விருவரில் ஒவ்வொருவரும் மற்றவரது வாழ்க்கை வரலாற்றை எழுதிய பெருமையுள்ளோர்.

இந்த ஸுல்தான் முஹம்மத் மறுபடியும் கர்னுதாவில் ஹி. 763ல் ஸுல்தான் ஆனார். அதே காலத்தில் மொரோக்கோ ஸுல்தான் அபூ ஸலாம் கொலை செய்யப்பட்டு இறந்தபடியால், இப்னு கல்தூன் மொரோக்காவில் இருக்க விருப்பமில்லாத நிலைமையில், கடல்கடந்து ஸுல்தான் முஹம்மதிடம் வந்துவிட்டார்.

கர்னுதாவிலே இப்னு கல்தூன் மேலான மரியாதை பெற்றார். ஸுல்தான் முஹம்மத் அவரை உள்ளன்புடன் வரவேற்றுத் தமது அந்தரங்கக் காரியதரிசியாக நியமனம் செய்தார். இந்த ஸுல்தான் முஹம்மத் என்பவர் அகதியாக மொரோக்கோவில் இருக்கையில் இப்னு கல்தூன் அவருக்குப் பலவகையிலும் உதவி செய்தாரல்லவா? எனவே, அவரது திறமையை அறிந்து ஹி. 765 (கி. பி. 1363)ல், கஸ்தீல், (Castile) பிரதேசக் கிறிஸ்தவ அரசர் பெட்ரோ என்பவரிடம் சமாதானத் தூதுவராகவும் இப்னு கல்தூனை ஸுல்தான் முஹம்மத் அனுப்பினார்.

இஷ்பீலியா (ஸெவில்) நகரிலே இப்னு கல்தூனுடைய மூதாதைகள் பெருஞ் சிறப்புடன் வசித்தார்கள் என்று நாம் கண்டோம். அத்தகைய பழமையானதும் தமது குடும்பத்துப் பெரியார்களுடன் தொடர்புள்ளதுமான நகரில் அவர் வந்தார். சந்தோஷப்பட்டார். மேலும், தாம் சென்ற தூதிலும் வெற்றிபெற்று கர்னுதா திரும்பினுர். பிறகு இப்னு கல்தூனுக்குப் பல ஜாகீர்களும், வெகுமதிகளும் கிடைத்தன. தமது பெண்டு பிள்ளைகளை ஆப்பிரிக்காவிலிருந்து கர்னுதாவுக்கு அழைத்து, நிம்மதியுடன் வாழ்க்கை நடத்தினுர்.

இவ்வாறு சிலகாலம் சென்றது. அதற்குப் பிறகு, ஸுல்தான் முஹம்மதும் அவரது மந்திரியும், இப்னு கல்தூனுடைய ஆப்த நண்பருமான இப்னுல் கதீப் என்பவரும் அவருடன் அன்புக் குறைவுடன் நடந்துகொண்டார்கள். எனவே, அவர் ஸுல்தான் முஹம்மதிடம் அனுமதிபெற்று மறுபடியும் ஆப்பிரிக்காவுக்கு வந்துவிட்டார்.

## 4. ஆப்பிரிக்காவில் – பூஜேயில்

அக்காலத்தில் அபூ அப்துல்லாஹ் முஹம்மத் என்பவர் பூஜேய் பிரதேசச் சிற்றரசராக இருந்தார். அவர் இப்னு கல்தூனைத் தமது தர்பாருக்கு அழைத்து மரியாதை செய்தார். இவ்விருவரும் முன்னொரு காலத்தில் ஓரிடத்தில் சிறைவாசம் செய்தார்கள். அதாவது, முன்பு மொரோக்கோ ஸுல்தான் அபுல் ஹஸ்ஸான் தூனிஸ் நாட்டின் மீது படையெடுத்து வந்தசமயம், அந்த நாட்டுக் கடற்கரைப் பகுதியில் பூஜேய் பிரதேசத்தில்

சிற்றரசராக இருந்த, முஹம்மத் என்பவரைக் கைதியாக்கி மொரோக்கோவுக்குக் கொண்டு போனுர். ஸுல்தான் அபுல் ஹஸ்ஸான் இறந்த பிறகு அவரது புத்திரர் ஸுல்தான் அபூ இனுன் என்பவர் அவரை விடுதலை செய்து, பிறகு, மறுபடியும், மொரோக்கோவிற்குக் கொண்டுபோய் அங்கு அவரைக் கைதியாக வைத்திருந்தார். அச்சமயம் மொரோக்கா ஸுல்தானிடம் காரியதரிசியாக இருந்த இப்னு கல்தூன், இந்தக் கைதியிடம் அனுதாபங்காட்டி, அவரை மறுபடியும் மன்னராக்க இரகசிய உதவி செய்தாரென்று சந்தேகப்பட்டார். எனவே, ஸுல்தான் அபூ இனுன், இப்னு கல்தூனை யும் கைது செய்துவிட்டார். ஆனுல், அடுத்த மொரோக்கோ, ஸுல்தான் காலத்திலே இருவரும் விடுதலையடைந்தார்கள். அச்சமயம், தாம் மறுபடியும் பூஜேயில் ஆட்சி செய்தால் இப்னு கல்தூனைத் தமது மந்திரியாக்குவதாக, அமீர் அபூ அப்துல்லாஹ் முகம்மத் வாக்களித்தார். அவ்வாறே ஹிஜ்ரி 765 (கி பி. 1363)-ல் அவர் சிற்றரசரானவுடன், அடுத்த ஆண்டில் அந்தலூஸிலிருந்து தம் தர்பாருக்கு வந்த இப்னு கல்தூனைத் தமது காரிய தரிசியாக நியமித்தார். இந்த உத்தியோகத்திலே இப்னு கல்தூனுக்கு சர்வாதிகாரியின் பதவி கிடைத்தது. நிர்வாகம், நீதி, வரி வசூல், ஸுல்தான் - பிரஜைகள் தொடர்பு முதலிய எல்லா விதமான அரசாங்க அலுவல்களும் அவர் கையில் இருந்தன. அவற்றை இப்னு கல்தூன் வெகு திறமையுடன் நடத்திஞர். ஸுல்தானும் இப்னு கல்தூனுக்கு அளவுகடந்த மரியாதை செய்தார்.

இவ்வாறிருக்கையிலே, ஹிஜ்ரி 767-ல் அமீர் அபூ அப்துல்லாஹ் முஹம்மதுடைய சகோதரரும் கான்ஸ்தந்தைன் பிரதேசச் சிற்றரசருமான அபுல் அப்பாஸ் என்பவர், பூஜேய் நகரைத் தாக்கித் தமது சகோதரர் அமீர் அபூ அப்துல்லாஹ் முஹம்மதைக் கொன்று, அந்தப் பிரதேசத்திற்கு அரசராகிவிட்டார். இனி அங்கு தமக்கு உயர்வு கிடையாதென்று நினைத்து, இப்னு கல்தூன் அங்கிருந்து, பிஸ்கரா (Biskera) பிரதேசத்திற்குச் சென்று அங்கிருந்த சிற்றரசர் அஹ்மத் பின் முஸ்னி (Muzni) என்பவரிடம் அடைக்கலம் தேடினர்.

அப்பொழுது, திலம்ஸான் பிரதேச அமீராக அபூ ஹாமு மூஸா பின் அப்துர் ரஹ்மான் என்பவர் இருந்தார். இவர் காலஞ்சென்ற பூஜேய் பிரதேச அமீரான அபூ அப்துல்லாஹ் முஹம்மத் உடைய மைத்துனர் பூஜேய் பிரதேசத்தை வெல்வதில் தமக்கு உதவி செய்யவேண்டுமென்று அவர் இப்னு கல்தூனிடம் வேண்டுகோள் விடுத்தார். அதற்கு உடன்பட்டு, இப்னு கல்தூனும் ஒருவாறு உதவி செய்தார். என்றுலும், அவர் இனிமேல் அரசியல் விஷயங்களில் கலந்துகொள்ள மனமில்லாமல் ஒதுங்கிவிடவும், இலக்கியத்துறையில் பணியாற்றவும் முடிவுசெய்தார். ஏனென்றல் இரண்டு தடவை அவருக்கு ஹிஜ்ரி 771-ல் ராணுவத் தோல்வியே கிடைத்தது. எனவே அபூமத்யான் என்ற இடத்தில் ஸூபிகள் வசிக்கும் கான்காவில் ஹிஜ்ரி 772 (கி. பி. 1370) வரை இலக்கியத்துறையில் அமைதியுடன் காலங்கழித்தார்.

இதற்கிடையில் மொரோக்கோவில், ஹிஜ்ரி 768-ல் அப்துல் அஜீஸ் பின் அபுல் ஹஸ்ஸான் என்பவர் திலிம்ஸானைத் தாக்கி அதை ஹிஜ்ரி 772-ல் வென்றுவிட்டார். இப்னு கல்தூன் அங்கிருந்து மறுபடியும் அந்தலுஸ் நாட்டிற்குச் செல்ல முயன்றார். ஆனால், அதற்குள் ஸுல்தான் அப்துல் அஜீஸுடைய படைவீரர் அவரைக் கைதியாக்கி விட்டனர். என்றாலும், இப்னு கல்தூனுடைய விளக்கத்தைக் கேட்டபிறகு, ஸுல்தான் அப்துல் அஜீஸ் அவரை விடுதலை செய்துவிட்டார். பிறகு ஸுல்தான் அஜீஸுடைய வெற்றிகளில் இப்னு கல்தூன் உதவிசெய்தார்.

அச்சமயம் அந்தலுஸிலிருந்து மந்திரி இப்னு கதீப், தமது ஸுல்தானுடைய பகைமைக்குப் பயந்து தப்பியோடி, ஸுல்தான் அப்துல் அஜீஸிடம் வந்து அடைக்கலம் புகுந்தார். ஆனால், சில நாட்களில் அப்துல் அஜீஸ் இறந்துவிடவே, அவரது புத்திரர் அல்ஸயீத் என்பவர் ஸுல்தானானார். இந்த ஸுல்தான் காலத்திலே இப்னு கல்தூன் மறுபடியும் பஸ் நகரில் சிறப்புடன் வாழ்ந்தார்.

ஆனால், அடிக்கடி அரசியல் குழப்பங்களும், அரசாங்க மாறுதல்களும் உண்டாகிக்கொண்டிருப்பதைக்கண்டு இப்னு கல்தூன் மறுபடியும் அந்தலுஸ் சென்று தமது இலக்கிய, சரித்திர ஆராய்ச்சிகளை ஆரம்பிக்க விரும்பினார். அவ்வாறே சென்றார். அதுவரை அடிக்கடி தங்களுக்கிடையில் பகைத்துப் போர்செய்துகொண்டிருந்த அந்தலுஸ் — மொரோக்கோ நாடுகள் அப்பொழுது

சமாதான நிலைமையில் இருந்தன. எனவே மொரோக்கோவுக்கு வந்து அடைக்கலம் புகுந்திருந்த இப்னு கதீப் என்ற மேதையை அந்தலுஸ் நாட்டு ஸுல்தானுடைய தூண்டுதலின்பேரில் மொரோக்கோ ஸுல்தான் ஹிஜ்ரி 766 (கி. பி. 1374)-ல் கொன்றுவிட்டார்.

இப்னு கல்தூனும் அந்தலுஸில் ஆபத்துக்கு ஆளானார். ஆனால், அந்தலுஸ் ஸுல்தான் அவரைக் கொல்லாமல், நாடு கடத்தி ஆப்பிரிக்காவுக்கு அனுப்பிவிட்டார்.

## 5. உலக வரலாறு

ஹி. 776, (கி. பி. 1374)-ல் இப்னு கல்தூன் திலம்ஸான் வந்து, அரசியல் விஷயங்களில் கலந்து கொள்ளாமல், இலக்கிய, சரித்திர, ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டார். பிறகு, கான்ஸ்தன்தைனுக்குத் தெற்கிலிருந்த பனூ ஆரிமா வட்டத்திற்குச் சென்று அங்கு நான்கு ஆண்டுகள் நிம்மதியுடன் ஓய்வு பெற்று, மனச் சாந்தி பெற்று, குழப்பம் விளைவிக்கும் அரசியல் துறையிலிருந்து விலகி நின்று, ஏராளமான நூல்களை வாசித்தார். அவற்றை வெகு நிம்மதியுடன் ஆராய்ந்தார். சிந்தனை செய்தார்.

**வரலாற்று நூல்கள் :**

அப்பொழுது அவருக்கு நாற்பத்தைந்து வயது. எனவே, பல நூல்கள் கற்று, திட்ட வட்டமான முடிவுகள் செய்யும் நல்ல பருவத்தில் இருந்தார்.

அக்காலத்தில் அந்தலுஸிலும், வட ஆப்பிரிக்காவிலுமிருந்த நூல் நிலையங்களிலிருந்து புத்தகங்களையும், அக்காலத்திய பல்வேறு அரசியல் கொள்கைகளையும், பற்பல இனத்தாரின் சமூகப் பழக்க வழக்கங்களையும் ஆராய்ந்தார். தாம் கண்டவற்றையும், கேட்டவற்றையும், கற்றவற்றையும் அலசிப் பார்க்கும் சிந்தனு சக்தியும் உள்ளவராக இருந்தார். உடலுக்கும், உள்ளத்திற்கும் கலக்கம் ஏற்படாத அந்த நிம்மதியான இடத்தில்தான் உலகப் புகழ்பெற்ற அவரது, "முகத்தமா" என்ற "முன்னுரை" (Prolegomina) ஹி. 779 (கி. பி. 1377)-ல் ஐந்து மாதங்களில் உருவாயிற்று. மக்களுடைய சிந்தனை உலகில் உண்டாகும் உயர்ந்த கருத்துக்களும் கொள்கைகளும் அவருக்கு அங்குதான் வளம் பெற்று உருவெடுத்தன. தனித்து வாழ்க்கை நடத்தியபொழுதுதான், அவருடைய உள்ளத்திலே நவீனமான எண்ணங்களும், புதிதுபுதிதான கொள்கைகளும் நுழைந்து இடம் பெற்றன. இவையெல்லாம் ஒருவாறு பக்குவப்பட்டதே அவரது "முன்னுரை"

வரலாறு :

பிறகு, உலக வரலாறு எழுத விரும்பினர். இதற்காகப் பல நூல்கள் பார்வையிட வேண்டுமல்லவா? எனவே, ஹி. 780 (1378)-ல் தூனிஸ் நகருக்கு — அங்குள்ள நூல்நிலையங்களைப் பயன் படுத்துவதற்காக — வந்தார். தூனிஸ் நகரம் இப்னு கல்தூனுடைய பிறப்பிடம். அங்கு அவருடைய நண்பர்களும் உறவினர்களும் இருந்தார்

கள். அங்குள்ள நூல் நிலையங்கள் அவருக்குப் பெருத்துணையாயிருந்தன.

எனவே, அப்பொழுதிருந்த தூனிஸ் பிரதேச ஸுல்தான் அபுல் அப்பாஸ் என்பவரிடம் அனுமதி பெற்று ஹி. 780-ல் அங்கு வந்து சேர்ந்தார். ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் வரை பார்க்கமுடியாமலிருந்த தமது பிறப்பிடத்தை இப்னு கல்தூன் மறுபடியும் பார்த்தார். அரசாங்கத்தின் ஆதரவும் கிடைத்தது. சரித்திரம் எழுதும் அவரது பணியை அந்த ஸுல்தான் மெச்சினர். வரலாற்றுத் தயாரிப்பில் உதவியும் செய்தார்.

ஹி. 784 (கி. பி. 1382)-ல் தமது வரலாற்று முன்னுரையையும் தமது இஸ்லாமிய அரசாங்க வரலாறுகளையும், திருத்தி, ஸுல்தான் அபுல் அப்பாஸ் உடைய அவையிலே அரங்கேற்றினர்.

மறுபடியும், அரசியல் சிக்கல்களில் தலையிட நேரிடுமென்று அஞ்சி, ஹி. 784 (கி. பி. 1382)-ல் அவர், மக்காவுக்கு ஹஜ் தல யாத்திரை செய்யப் புறப்பட்டார். ஏனென்றல், அப்பொழுது தூனிஸிலிருந்த அரசியல் நெருக்கடியிலே, அவருக்கு ஓய்வு நேரமும், மனநிம்மதியும், இலக்கிய ஆராய்ச்சிக்குரிய வசதிகளும் கிடைக்கவில்லை. ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளாக வட ஆப்பிரிக்காவிலும் அந்தலுஸிலும் அப்பொழுதிருந்தஅரசாங்கங்களுடனும், சிற்றரசுகளுடனும், அரசியல் மாற்றங்களிலும் கொண்ட தொடர்பினல் அவருக்குப் பல வகையில் அறிவுப் பெருக்கமும், உலக அனுபவங்களும், பல்வேறு வகையான மனிதப் பண்புகளின்

தொடர்பும் கிடைக்கும் வாய்ப்புகள் கிடைத்தன. என்றாலும், பலவிடங்களில் பொறாமையின் காரண மாக அவருக்குத் துன்பங்கள் பல ஏற்பட்டன. அதனால், ஓர் எழுத்தாளருக்கு வேண்டிய நிம்மதி யும், ஓய்வும், ஆராய்ச்சி வசதிகளும் அவருக்குக் கிடைக்கவில்லை. எனவே, அங்கிருந்து பிறநாடு களுக்குச் சென்று தமது இலக்கியப் பணியை நிம் மதியுடன் செய்யலாமென்று துணிந்தார். அதற் குரிய மன நிலையானது, ஹஜ் செய்வதால் கிடைக்குமென்றும் அவர் நினைத்திருக்கலாம்.

## 6. எகிப்து நாட்டில்

ஹி. 784—808 கி. பி. 1382—1406.

எகிப்து (மிஸ்ர்) நாடு பழங்காலப் பெருமை யுடையது. உலக வரலாற்றிலே, பூர்வீக நாகரீக நாடுகளில் எகிப்தும் ஒன்று, பல்லாயிரம் ஆண்டு களுக்குமுன் பல அரச வம்சத்தினர் அந்த நாட் டைச் சிறப்புடன் ஆட்சி புரிந்தார்கள். பிறகு அந்த நாடு ரோமராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்தது. இஸ்லாமிய காலங்களில், இரண்டாம் கலீபா ஹஸரத் உமர் (ரலி) காலத்திலே அம்ரு பின் ஆஸ் (ரலி) என்ற தளபதி அதைவென்று, இஸ்லாமியக் குடியரசில் சேர்த்தார். பிறகு, திமஷ்க் (டமஸ்கஸ்) நகரில் ஆண்ட உமய்யா கலீபாக்கள் காலத்தில், அது இஸ்லாமிய அரசாங்கத்தின் ஒரு பகுதியாய் இருந்தது. ஆனால், ஹி. 254 (கி. பி. 868) முதல், ஹி. 293 (கி. பி. 905) வரை தூலூன் அரசவம்சம் ஆட்சிசெய்தது. பிறகு, பாத்திமி கலீபாக்கள்

கெய்ரோ (காஹிரா) நகரைத் தலைநகராகக்கொண்டு ஹி. 567 (கி. பி. 1171) வரை ஆண்டார்கள். அதற்குப் பிறகு, ஸுல்தான் ஸலாஹுத்தீனுடைய அய்யூபி குடும்பத்தார் ஹி. 648 (கி. பி. 1250) வரை அதிகார பீடத்தில் அமர்ந்திருந்தார்கள். அதற்கப்பால், மம்லூக் என்ற அடிமை வம்சத்தார் எகிப்து நாட்டின் அதிகாரிகளானூர்கள். இந்த அடிமை அரசர்களில், பஹ்ரீ மம்லூக் வம்சத்தார் ஹி. 653 (கி. பி. 1255) முதல், ஹி. 793 (கி. பி. 1390) வரையும், புர்ஜீ மம்லூக் வம்சத்தார், ஹி. 764 (கி. பி. 1362) முதல் ஹி. 923 (கி. பி. 1517) வரையிலும் ஸுல்தான்களாக இருந்தார்கள். ஹி. 923 (கி. பி. 1517)ல் அந்த நாடு உத்மானிய ராஜ்யத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது.

மம்லூக் ஸுல்தான்களின் ஆட்சி நடக்கும் பொழுது இப்னு கல்தூன் எகிப்து நாட்டிற்கு வந்தார். இந்த ஸுல்தான்கள் இராணுவத் திறமையில் சிறந்தவர்கள். கலைகளையும் விஞ்ஞானத்தையும் வளர்த்தார்கள். கெய்ரோ நகரத்திலே பல அழகமைந்த பள்ளிவாசல்களையும் இதர கட்டிடங்களையும் அவர்கள் நிர்மாணித்தார்கள்.

இந்த புர்ஜீ (Burji) மம்லூக் ஸுல்தான்கள் காலத்திலே (ஹி. 784-923. கி. பி. (1382-1517) அழகிலும், புத்தி நுட்பத்திலும், வீரத்திலும் கம்பீரத்திலும் சிறு பிராய முதல் சிறந்தோரான இந்த மன்னர், மலிக் ஜாஹிர் பர்கூக் (Malik Zahir Barkuk.) என்பவரின் ஆட்சி அப்பொழுது நடந்து வந்தது. இதற்குமுன் எகிப்து நாட்டில் ஆட்சி

செய்த பஹ்ரீ (Bahri) மம்லூக் வம்சத்தாரில் சிறந்த ஸுல்தானை ருக்னுத்தீன் பய்பர்ஸ் பந்து கதாரீ என்பவருடைய "மலிக் ஜாஹிர்" என்ற பட்டத்தை இவரும் வகித்துக்கொண்டு, பல அரசியல் சீர் திருத்தங்கள் செய்து, நேர்மையற்ற தீர்வைகளை நீக்கி, பிரஜைகளின் நல்வாழ்விற்காக அரும்பாடு பட்டார்.

அக்காலத்தில் தைமூர் என்ற ஸுல்தான் மத்திய ஆசியாவிலே, ஸமர்கந்த் என்ற தமது தலைநகரிலிருந்து புறப்பட்டு தென்மேற்கு ஆசியா நாடுகள் மீது படையெடுத்தார். அவரால் தோற் கடிக்கப்பட்டுப் புகலிடம் தேடி வந்த முஸ்லிம் ஸுல்தான்களையும் அமீர்களையும், எகிப்து நாட் டிலே ஸுல்தான் பர்கூக் வரவேற்று அவர்களுக்கு ஆதரவு தந்தார். மேலும், பல அறிஞர்களும் அவரது தர்பாரில் ஆதரிக்கப்பட்டார்கள்.

இப்னு கல்தூனும் இந்த ஸுல்தானல் வரவேற் கப்பட்டு ஆதரிக்கப்பட்டார். எகிப்து நாட்டிற்கு வந்தபிறகு, இப்னு கல்தூனுடைய வாழ்க்கையிலே ஒரு மாற்றமும், இன்பமும் நிம்மதியும் உண்டாவ தாகத் தோன்றுகிறது. எத்தனையோ ஆண்டுகளாக நிம்மதியற்ற நிலைமையில் அரசியல் குழப்பங்களி லும், பொருமைப் போர்களிலும், இராஜ தந்திரச் சூட்சிகளிலும் சிக்கிக்கொண்டிருந்த இப்னு கல்தூனுக்கு எகிப்து நாட்டிலே, கெய்ரோ நகரிலே, ஸுல்தான் மலிக் ஜாஹிர் பர்கூக் என்பவரின் ஆதரவிலே, ஓர் ஆராய்ச்சியாளருக்கும், சிந்தனைச் சிற்பிக்கும், சரித்திராசிரியருக்கும் வேண்டிய

ஆராய்ச்சி வசதிகளும், கவலையில்லாத வாழ்க்கையும் கிடைத்ததுபோலக் காணப்பட்டது.

தூனிஸிலிருந்து ஹி. 784 (கி. பி. 1382)ல் இப்னு கல்தூன் புறப்பட்டு, எகிப்து நாட்டுக் கடற்கரையிலுள்ள அலக்சாந்திரியா (இஸ்கந்தரிய்யா) துறைமுகத்தில் வந்திறங்கி அங்கிருந்து, அந்த நாட்டின் தலைநகரமான கெய்ரோ (காஹிரா)வுக்கு ஹி. 784 துல் கஅதா (கி. பி. 1382 நவம்பர்) மாதத்தில் வந்து சேர்ந்தார்.

அச்சமயம், கெய்ரோ நகரம், ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, இந்த மூன்று கண்டங்களிலும் முஸ்லிம் கலைகளுக்கு நடு நாயகமாக விளங்கியது. இலக்கியத் துறையிலும், விஞ்ஞானத் துறையிலும் சிறந்தோரெல்லோரையும் அங்கிருந்த ஸுல்தான்கள் ஆதரித்தார்கள்.

சுமார் அரை நூற்றுண்டுக்கு முன் கெய்ரோ நகரைப் பார்வையிட்ட இவரது நாட்டவரான இப்னு பதூதா என்னும் உலக சஞ்சாரி அதன் அழகையும், உயர்வையும், செல்வத்தையும், கலைகளையும் கண்டு திடுக்கிட்டு வியப்படைந்ததைப் போலவே இப்னு கல்தூனும், அதுவரை கண்டிராத அற்புதமான கெய்ரோ நகரைக்கண்டு வியப்படைந்தார். அந்த நகரின் வனப்பையும், வளத்தையும், கட்டிடக் கலையையும் கண்டு உணர்ச்சி மிகுதியால், ஆனந்தக் கடலில் மூழ்கி, அதைப் போற்றிப் புகழ்கிருர். அந்த நகரை “உலகின் தலைநகரம்” “பூலோகப் பூங்கா” “பல நாட்டு மக்கள் கூடுமிடம்”, “இஸ்லாத்தின் பீடம் ”, என்றெல்லாம்

எழுதுகிருர். எங்கும் அவரது கண்களுக்கு அரண் மனைகளும், மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும், கலா பீடங்களும், பாடசாலைகளும் காட்சியளிப்பதைக் காண்கின்ருர். நட்சத்திரங்களைப் போல உயர்ந்த கலாவல்லுநர்கள் (உலமாக்கள்) அங்கு சிறப்புடன் வாழ்கின்ருர்கள்! அதன் கடைத் தெருவெல்லாம் செல்வமே நிறைந்து காட்சியளிக்கின்றது! - இவ்வாறெல்லாம் அவர் அந்த நகரைப் புகழ்கின்ருர்!

இன்னெரு வியப்பென்னவென்ருல், அவர் அந்த நாட்டிற்கு அந்நியராக வந்தபோதிலும் அவர் வருமுன்னரே அவரது இலக்கியப் புகழ் எல்லா முஸ்லிம் நாடுகளிலும் பரவிவிட்டது! அவர் எழுதிய வரலாற்று நூலையும், மனித சமுதாய வாழ்க்கையின் ஏற்றத்தையும் தாழ்வையும் பற்றி, உலகிலே முதன் முதலாக எழுதப்பட்ட 'முன்னுரை' என்ற நூலையும் அந்த நாட்டு ஆசிரியர்களும் மாணவர்களும் அறிந்திருந்தார்கள். இப்னு கல்தூன் துனிஸில் இருக்கையிலேயே மனித வர்க்கத்தின் வாழ்க்கையின் முன்னேற்றத்தின் தத்துவங்களைப் பற்றி, அவர் செய்திருந்த அதியாச்சரியமான அரிய விளக்கங்களையும், நவீன கருத்துக்களையும், அருமையான புதிய நடையையு, ம் அந்த மக்கள் நன்ருகத் தெரிந்திருந்தார்கள்.

எனவே, அவர் கெய்ரோவுக்கு வந்தபொழுது ஆசிரியர்களும், மாணவர்களும் பொதுமக்களும், அவரை எதிர்கொண்டழைத்தார்கள். பல நாட்களாக, கெய்ரோவில் அல் அஸ்ஹர் (Azhar) பல்கலை

கழகத்திலே சமுதாய அமைப்பின் தத்துவங்களைப் பற்றியும், ராஜ்யங்களின் தோன்றுதல்களைப்பற்றியும், இன்னும் பல முக்கியமான விஷயங்களைப் பற்றியும், அரசியல் அடிப்படை கொள்கைகளைப் பற்றியும் சொற்பொழிவாற்றினர். ஹதீது, மாலிகி பிக்ஹு இவற்றைப்பற்றியும் பிரசங்கித்தார். கடல் மடை திறந்ததைப் போன்று, இனிய சொற்களில், தர்க்க ரீதியில் அவரது ஆழ்ந்த அறிவின் முடிந்த ஆராய்ச்சிகளை சொல்மாரியாகப் பொழிந்தார். அக் காலத்திய பேச்சாளர்களில், அவ்வளவு தெளிவாகவும், விரிவாகவும், இனிமையாகவும், கவர்ச்சியாகவும் உயர்ந்த கருத்துக்களை — குறிப்பாக அரசியல் பற்றியும், மனித வர்க்கத்தின் எழுச்சி வீழ்ச்சியைப் பற்றியும்— இப்னு கல்தூனைப் போல் விளக்குவோர் எவருமிலர் என்று பாராட்டப் பெற்றார். மேலும், எழுத்தாளர்களிலும் தனிச்சிறப்புள்ளவராக ஒப்புக் கொள்ளப்பட்டார். அப்போது எகிப்து நாட்டிலிருந்த தகீயுத்தீன் மக்ரீஸி, அல் ஹபீஸ் இப்னு ஹஜர் அஸ்குலானீ போன்ற பெரிய சரித்திராசிரியர்களும் எழுத்தாளர்களும் ஹதீதுக் கலைஞர்களும் அவரது சொற்பொழிவுகளைக் கேட்டு, அவரது புகழைப் பரப்பினர்கள்.

அக்காலத்தில், மிஸ்ர் நாட்டில் ஆட்சி செலுத்திவந்த ஸுல்தான் அஸ் ஸாஹிர் பர்கூக் என்பவர் இவரை அன்புடன் உபசரித்து இவரது தேவைகளைப் பூர்த்தி செய்தார். ஆகையால், இவரது இலக்கியப் பணிக்கு வேண்டிய ஆதரவும், ஓய்வும், வெகுநாளாகத் தேவையாயிருந்த மன

நிம்மதியும் கிடைத்தது. கெய்ரோவில் அம்ரு பின் ஆஸ் பள்ளிவாசலுக்குப் பக்கத்திலிருந்த கம்ஹியா என்ற ஒரு கலாசாலையில் அந்த ஸுல்தான் இவரைப் பேராசிரியராக நியமித்தார். இப்னு கல்தூனுடைய தொடக்கச் சொற்பொழிவை ஸுல்தான் பர்கூக் சிறந்ததொரு விழாவைப் போல் கொண்டாடினர். அந்த முதல் சொற்பொழிவைக் கேட்கும்படி பலரை அனுப்பினர். கலைஞர்களும், எழுத்தாளர்களும் கூடியிருந்த அப் பெருங் கூட்டத்திலே அன்று இப்னு கல்தூன் ஆற்றிய சொற்பொழிவு, அதன் பரந்த அறிவாலும், புத்தம் புதிய கொள்கைகளாலும், ஆழ்ந்த கருத்துக்களாலும், பொருட் செறிவாலும், ஆராய்ச்சி முடிவுகளாலும் இன்னிசையான அழகிய உயர்ந்த நடையாலும் கேட்போர் மனதைக் கவர்ந்தது.

**நீதிபதி :**

இவ்வாறு, அரிய சொற்பொழிவுகள் ஆற்றிக் கொண்டும், இலக்கிய சம்பந்தமானதும் சரித்திர சம்பந்தமானதுமான பல ஆராய்ச்சிகளை நிம்மதியுடன் செய்து கொண்டுமிருந்தார். இரண்டாண்டுகள் கழிந்தன. பிறகு, ஒரு நாள் ஸுல்தான் இவரை அழைத்து நீதிபதி உத்தியோகம் கொடுத்தார்.

இவருக்கு முன் அந்தப் பதவியிலிருந்த ஜமாலுத்தீன் கைருல் ஸிகந்தரீ என்பவர் ஸுல்தானல் நீக்கப்பட்டு விட்டதாலும், இப்னு கல்தூன் புதிதாய் வந்த பிற நாட்டார் ஆனதாலும், அவரை ஸுல்தான் அதிகமாக நேசித்ததாலும், எதிப்பு

நாட்டைச் சேர்ந்த உலமாக்கள் புறக்கணிக்கப் பட்டதாலும், இப்னு கல்தூனுக்கு எதிர்ப்பு ஆரம் பித்தது. மேலும், அவர் நீதிபதி என்ற நிலைமையில் நேர்மையான தீர்ப்புகள் அளிப்பார். சிபார்சுகளைக் கேட்கமாட்டார். இலஞ்சம் வாங்குவோரைக் கடுமையாகத் தண்டிப்பார். பொய்ச் சாட்சியம் சொல்வோரை வெறுப்பார். செல்வாக்குள்ளோரின் வார்த்தைகளையும் உயர்விடத்திலிருந்து வரும் பய முறுத்தல்களையும் கவனிக்கமாட்டார். இறைவ னுக்குப் பயந்து இறைவனுடைய சட்டத்தைச் செயலாற்றுவார்.

எனவே, பலர் மறைமுகமாக அவரைப் பகைத் தனர். ஸுல்தானிடம் அவரைப்பற்றிக் கோள் சொன்னார்கள். இந்த எதிர்ப்பானது பெரும் புய லாகக் கிளம்பி, இறுதியாக அவர் ஹி. 787 ஜமாதுல் அவ்வல் — கி. பி. 1385 ஜூலை மாதம் நீதிபதிப் பதவியிலிருந்து நீங்கும்படி பலவந்தப் படுத்தப்பட்டார்.

**குடும்பம் :**

இச்சமயம் இன்னொரு பெரிய துன்பம் உண் டாயிற்று. தூனிஸிலிருந்த அவரது பெண்பிள்ளை களை அவர் வெகு கஷ்டத்துடன் அழைத்தார். ஆனால், அவர்கள் ஏறிவந்த கப்பல், வழியில் புய லின் காரணமாக மூழ்கிவிட்டது. இந்த இரண்டு துன்பங்களால் அவர் மனங் கலங்கிவிட்டார்.

என்றாலும், ஸுல்தான் அவருடன் நேச மாகவே இருந்ததாகத் தெரிகிறது. கம்ஹியா கலா சாலையில் அவரது சொற்பொழிவுகளும் ஆசிரியப் பணியும் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது. சில

நாட்கள் சென்றபின், ஸுல்தான் பர்கூக், தாம் புதிதாக நிறுவிய ஸாஹிரிய்யா, பர்கூகியா கலாசாலையில் மாலிகி சட்டப் பேராசிரியராக இப்னு கல்தூனை நியமித்தார். இந்தக் கலாசாலையில் இவர் ஆற்றிய முதற் சொற்பொழிவானது, முன்னர் கம்ஹியா கலாசாலையில் நடந்த முதற் சொற்பொழிவைப் போலவே சிறந்ததொரு விழாவாகக் கொண்டாடப்பட்டது. எனவே, இவ்விரண்டு கலாசாலைகளிலும், ஹி. 789 — கி. பி. 1387 வரை பேராசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார்.

ஹிஜ் — ஹி. 789 கி. பி. 1387

தூனுஸிலிருந்து இப்னு கல்தூன் ஹஜ் செய்யும் நோக்கத்துடன் புறப்பட்டாரல்லவா? அந்த ஆசை ஐந்தாண்டுகளுக்குப் பிறகு நிறைவேறியது. இவர் ஹஜ் செய்வதற்காகப் புறப்பட்ட பொழுது ஸுல்தான் அஸ் ஸாஹிர் பர்கூக் அவருக்குப் பண உதவி செய்து, அனுப்பி வைத்தார். ஹஜ் செய்துவிட்டு அடுத்த ஆண்டில் எகிப்துக்குத் வந்தார்.

ஹதீது ஆசிரியர் :— ஹி. 791 – கி. பி. 1389

ஸுல்தான் பர்கூக் அவரை வரவேற்று புதிய கல்லூரி ஒன்றில் ஹதீதுப் பேராசிரியராக நியமித்தார். இந்தக் கல்லூரியிலும் இப்னு கல்தூனுடைய தொடக்கச் சொற்பொழிவு வெகு சிறப்புடன் கொண்டாடப்பட்டது. இந்தச் சொற்பொழிவில் அவர் இமாம் மாலிக், அந்த இமாம் எழுதிய கிதாபுல் முவத்தா, மாலிகி கொள்கைகள் முதலியவற்றை விரிவாக விளக்கஞ் செய்தார்.

**ஷெய்க் — முதல்வர்:**

இவ்வாறிருக்கையில் அவருக்கு இன்னொரு பெரும் பதவி கிடைத்தது. அப்பொழுது ஸூபிகளின் பயிற்சி நிலையமான, பய்பர்ஸ் ஸூபி கான்கா என்ற பெரும் புகழ் பெற்ற கல்லூரியின் முதல்வர் — ஷெய்க் — (Principal) பதவி பெற்றார். அந்தப் பணியில் அவருக்கு ஊதியமும் அதிகரித்தது. நிம்மதியும் அதிமாகக் கிடைத்தது.

**அரசியல் குழப்பம் :—ஹி. 791 (கி. பி. 1388)**

ஆனால், திடீரென்று ஹி. 791-ல் எகிப்து நாட்டில் அரசியல் குழப்பங்கள் உண்டாகி, ஸுல்தான் பர்கூக் சிம்மாசனத்தை இழந்து, கைதியாக் கப்பட்டு, வெளியேற்றப்பட்டார். ஆனால், சில மாதங்கள் கழித்து, ஹி. 792-ல் அவர் மறுபடியும் எகிப்தின் மீது படையெடுத்து, ஸுல்தானாகிவிட்டார்.

இந்த இடைக்காலத்திலே, இப்னு கல்தூன் தமது உத்தியோகத்தையும், வருமானத்தையும், செல்வாக்கையும் இழந்தார். ஆனால், ஸுல்தான் பர்கூக் வந்தவுடன் மறுபடியும் அவருக்குப் பழைய அலுவலும் பணவுதவியும் கிடைத்தன. எனவே, அவர் மறுபடியும் ஓய்வுபெற்று நிம்மதியுடன் தமது ஆராய்ச்சிகளில் கவனம் செலுத்தினர்.

அதற்கடுத்த ஆண்டுகளில், எகிப்து ஸுல்தானுக்கும், வடமேற்கு ஆப்பிரிக்காவிலிருந்த இதர முஸ்லிம் ஸுல்தான்களுக்குமிடையில் நல்ல உறவு உண்டாகும்படி இப்னு கல்தூன் முயற்சி செய்தார். அதில் வெற்றியும் கண்டார்.

# 7. ஸுல்தான் தைமூர்

ஸுல்தான் பர்கூக் ஹிஜ்ரி 891-ல் காலஞ் சென்று அவரது புத்திரர் அல் நாஸிர் பராஜ் என்பவர் ஸுல்தானுனர். இந்த ஸுல்தானும் இப்னு கல்தூனை அன்புடன் ஆதரித்தார்.

அப்பொழுது ஸுல்தான் தைமூர் மத்தியாசியாவிலிருந்து புறப்பட்டுப் பல நாடுகளை வென்று கொண்டு ஸிரியா நாட்டில் நுழைந்தார். ஹலப் நகரை வென்று, டமஸ்கஸ் நகர் வரை வந்து விட்டார். அவர் எகிப்துக்குப் படையெடுத்துவரு முன்னரே அவரைத் தடுத்துவிடவேண்டுமென்ற எண்ணத்துடன் ஸுல்தான் அல் நாஸிர் பராஜ் பெருஞ்சேனையுடன் புறப்பட்டு திமஷ்க் நகருக்குச் சென்ருர். இப்னு கல்தூனையும் பல ஆலிம்களையும், பல ஸூபிகளையும் உடன் கொண்டுசென்ருர். ஆனுல், அச்சமயம் அவருக்கு விரோதமாக எகிப்தில் ஒருசதி நடப்பதாகத் தெரிந்து அவர் உடனே அங்கிருந்து கெய்ரோவுக்குத் திரும்பி விட்டார். இப்னு கல்தூன் டமஸ்கஸ் கோட்டையில் இருந்தார்.

> எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
> செய்தற்கு அரிய செயல்.

வாய்ப்புக் கிடைக்கும் பொழுது நாம் அரிய செயல்களைச் செய்யவேண்டும்.

> அறிவுடையார் எல்லாம் உடையர் அறிவிலார்
> என்னுடைய ரேனும் இலர்.

இப்னு கல்தூன் அப்பொழுது சமயோஜிதப் புத்தியுடன் நடந்துகொண்டார். தாதாரிகளின்

தலைமையில் ஸுல்தான் தைமூர், எகிப்து நாட்டின் மீது படையெடுத்து வந்துவிட்டால், பேராபத்து விளையுமென்றும், ஆகையால் அதைத் தடுக்க வேண்டுமென்றும் ஒரு திட்டமிட்டார். பல ஆலிம் களின் தலைவராகத் தூதுகோஷ்டியுடன் தைமூரிடம் சென்ருர். இந்த எழுபது வயதுக் கிழவர் வெகு துணிவுடன் ஒரு கயிற்றின் மூலமாக கோட்டை மதிலிலிருந்து இறங்கினுர்! தைரியமாகச் சென்று தைமூரின் பாசறையில் நுழைந்து அவரது கூடாரத்தின் முன் நின்ருர்! தைமூருக்கு ஸலாம் சொன்னுர். அப்பொழுது ஒரு திண்டின்மேல் சாய்ந்து உட்கார்ந்திருந்த தைமூர் அவருக்கு பதில் ஸலாம் சொல்லி, அருகில் உட்காரும்படி சமிக்கை செய்தார். உடனே இப்னு கல்தூன் சென்று தைமூரின் கையைப் பிடித்து மரியாதையாக முத்த மிட்டு, உட்கார்ந்துகொண்டார். மொழிபெயர்ப் பாளர் மூலம் இருவருக்கிடையில் பேச்சுவார்த்தை கள் நடந்தன.

இப்னு கல்தூனுடைய கம்பீரமான தோற்றத் தையும், அறிவு நிறைந்த பேச்சையும் கேட்டு, அவருடன் தைமூர் நேசங்கொண்டார். அந்தப் பேட்டியில் வடஆப்பிரிக்காவைப்பற்றித் தைமூர் விசாரித்தார். இப்னு கல்தூனுக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. உடனே வடஆப்பிரிக்காவின் நாடு கள், நகரங்கள், மக்கள், மொழிகள், கலாச்சாரம், வரலாறு முதலியவற்றை விரிவாகக்கூறினுர். சரித்திராசிரியரின் கொள்கைகளைத் தைமூர் மெச்சி ஞர். தமக்காக ஆப்பிரிக்காவின் சுருக்கமான வரலாறு எழுதித்தரவேண்டுமென்று இப்னு

கல்தூனைக் கேட்டுக்கொண்டார். சில நாட்களில் இப்னு கல்தூன், பன்னிரண்டு பாகங்களில் அந்தச் சரித்திரத்தைத் தயாரித்துக்கொடுத்தார். பிறகு அவர் தைமூருக்கு அழகிய குர்ஆன் பிரதியொன்றை அன்பளிப்பாகச் சமர்ப்பித்தார். தைமூர் குர்ஆனை வாங்கி, அதைத் தமது தலைமேல் வைத்து மரியாதை செய்தார். சில வாரங்கள் சென்ற பிறகு தைமூரிடம் அனுமதி பெற்று, இப்னு கல்தூன் எகிப்திற்கு ஹிஜ்ரி 803-ல் திரும்பினார்.

இந்தச் சந்திப்பின் காரணமாக யுத்தநிறுத்தம் ஏற்பட்டது. எகிப்து நாடு தைமூரின் படையெடுப்பிலிருந்து தப்பியது.

## 8. மரணம்

இப்னு கல்தூன் எகிப்திலிருந்து, திமிஷ்க் நகருக்குச் செல்லுமுன் இரண்டாம் தடவை நீதிபதியாக இருந்து, பிறகு அந்த உத்தியோகத்தில் இருந்து விலக்கப்பட்டார். ஸுல்தான் தைமூரைச் சந்தித்துவிட்டு, அவர் எகிப்துக்கு வந்த பிறகும், அவர் நான்கு தடவை நீதிபதி பதவியில் இருந்தார். ஆனால், அவர் நீதிபதியாக இருப்பதைப் பலர் விரும்பாமல் அவரை நீக்குவதற்கான முயற்சிகள் செய்துகொண்டே இருந்தார்கள். சில சமயம் இப்னு கல்தூன் வெற்றிபெற்றார். சில சமயம் தோல்வி அடைந்தார். அவர் ஆறுவது தடவை நீதிபதியாக இருக்கையில், அவரது எழுபத்தெட்டாம் வயதில், ஹிஜ்ரி 808 ரமலான் மாதம் இருபத்தாறும் நாள் (கி. பி. 1406 மார்ச் மாதம் பதினாறும் நாள்)

மகாபெரிய சரித்திராசிரியரும், அரசியல் வாதியும், சிந்தனைச் சிற்பியுமான, இப்னு கல்தூனுடைய இவ்வுலக வாழ்க்கை முடிவடைந்தது.

கெய்ரோ நகரிலே, நஸ்ர் நுழைவாயிலுக்கு வெளியே ஸூபி கபரஸ்தானிலே அவர் நல்லடக்கம் செய்யப்பட்டார். வடஆப்பிரிக்காவின் அரசியல் சிக்கல்களிலும் புயல்களிலும் அகப்பட்டு இருபத்தைந்து ஆண்டுகள் நிம்மதியற்ற வாழ்க்கையில் வசித்து, பிறகு அங்கிருந்து தப்பிவந்து எகிப்து நாட்டில் இருபத்து மூன்று ஆண்டுகள் ஒருவாறு நிம்மதியுடன் நீதிபதியாகவும், சொற்பொழிவாளராகவும், கலைச்செல்வராகவும், ஆசிரியராகவும், பணியாற்றியவரது வாழ்க்கை இவ்வாறு முடிவடைந்தது. உலகிற்கு முதல் முதலாக உலக சரித்திரத்தையும், அதன் சரித்திரப் புகழ்பெற்ற "முகத்தமா" என்ற முன்னுரையையும் தந்துதவிய உத்தமர் இவ்வாறு உலகிலிருந்து மறைந்தார். பெண்டு பிள்ளைகளை இழந்து, எகிப்து நாட்டில் தனிமையாகவும் பரதேசியாகவும் காலங்கழித்த பேரறிஞரின் வாழ்க்கை வரலாறு இவ்வாறு முடிவடைகின்றது.

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

## 9. நூல்கள்

இப்னு கல்தூன் சிறிதும் பெரிதுமான பல நூல்கள் எழுதியதாகத் தெரிகிறது. ஆனால், இன்று அவரது ஒரு நூல்தான் முக்கிய இடம் பெற்றிருக்கிறது. இந்த ஒரு நூலின் மூலமாகத்தான் அவரை

உலகம் போற்றுகிறது. அமைப்பிலும் கருத்துக்களிலும் உலகில் அதற்கு முன் எழுதப்பெற்ற நூல்களில்—குறிப்பாக, வரலாற்று நூல்களில் — காணப்படாததொரு தனிச்சிறப்புடைமையாலும், அதன் ஆசிரியர் ஒரு முஸ்லிமானதாலும் முஸ்லிம் உலகிற்கே இப்னு கல்தூன் பெருமை கொடுத்து விட்டார்.

இந்த "உலக வரலாறு" என்னும் நூல் பூர்வ கால முதல் இப்னு கல்தூனுடைய காலம் வரையுள்ள சரித்திர நிகழ்ச்சிகளைக் கூறுகிறது. குறிப்பாக ஸ்பெய்ன், ஆப்பிரிக்கா, ஆகிய நாட்டு மக்களைப்பற்றி விரிவாக அதில் எழுதப்பட்டிருக்கிறது. அதன் பெயர் :—

"கிதாபுல் இபார் வ தீவானுல் முப்ததா வல் கபர் பீ அய்யாமுல் அரப் வல் அஜம் வல் பர்பர். அரபியர், வெளி நாட்டார், பர்பர் ஆகியோரின் வரலாற்றைப்பற்றிய ஆதாரங்களும் செய்திகளும் உதாரணங்களும் அடங்கிய நூல்." என்பதாகும். இந்த நூலில் மூன்று பாகங்கள் உள்ளன. முதல் பாகம் முகத்தமா என்ற முன்னுரை (Prolegomena). இரண்டாம் பாகம் உலக வரலாறு. மூன்றும் பாகம் நூலாசிரியரின் சுயசரிதை.

முகத்தமா — முன்னுரை. **Prolegomena**

இது சரித்திரத்தின் தத்துவத்தைப் பற்றியும் சமுதாயத்தின் வளர்ச்சியைப்பற்றியும் வெகு விரிவாகக் கூறும் விளக்கமாகும். கருத்திலும், அமைப்பிலும், தெளிவிலும், நடையிலும், இது உலகில் முதலாவதான நூலாகும்.

**வரலாறு :**

வரலாறு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு முதல் பிரிவில், மனிதவர்க்கத்தை நாகரீகம் எவ்வாறு பாதித்தது என்று கூறப்பட்டிருக்கிறது. இரண்டாம் பிரிவில், பூர்வகால முதல் நூலாசிரியர் காலம்வரை அரபியர், அரபியரல்லாதார் இவர்களுடைய வரலாறு விளக்கப்பட்டிருக்கிறது. மூன்றும் பிரிவில், பர்பர் கோத்திரங்களின் வரலாறும், அவர்களால் வட ஆப்பிரிக்காவில் நிறுவப்பட்ட ராஜ்யங்களும் வர்ணிக்கப்படுகின்றன.

**சுயசரிதை :**

நூலாசிரியரைப் பற்றியும், அவரது குடும்பத்தைப் பற்றியும், பஸ், துானிஸ், திலம்ஸான், முதலிய பிரதேசங்களில் அவர் காலத்திலிருந்து அரச வம்சங்களைப்பற்றிய விவரங்கள் அடங்கிய நூலே, " சுயசரிதை " என்பதாகும்.

இப்னு கல்தூனுடைய உலக வரலாறு முதன்மையானதும் தனிச் சிறப்புடையதுமாகும். அவருக்கு முன்னிருந்த சரித்திராசிரியர்கள் ஒவ்வோர் ஆண்டிலும் நடந்த நிகழ்ச்சிகளை ஒன்றன்பின் ஒன்ருக எழுதிக்கொண்டே வந்தார்கள். கட்டுரைகளைப் போன்று, அரச வம்சங்களின் வரலாறுகளை சிலர் எழுதினுர்கள். ஆனுல், எல்லா நிகழ்ச்சிகளையும் வாசித்து ஆராய்ந்து, தொகுத்து, வகுத்து, பகுத்து அதை உருவாக்கி, அதன் தன்மையையும் தகையையும் அறிந்து, அன்றுவரை உலகமறியாததொரு நவீன முறையிலேயே சமூகவியல் என்ற

புதிய அமைப்பில் சமர்ப்பித்தோரில் இப்னு கல்தூனே முதலாம் சரித்திராசிரியராவர்.

சரித்திரம் என்பதை விஞ்ஞான ஆராய்ச்சி முறையில், தத்துவார்த்த அடிப்படையில், மனித சமுதாயத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் என்ற ஆராய்ச்சித் துறையின் நோக்கில், கற்கப்பட்டு, எழுதப்படவேண்டுமென்றும் — அதை ஒரு நிகழ்ச்சிக் குறிப்பாகமட்டும் கருதலாகாதென்றும் நவீன தர்க்கரீதியில் விளக்கஞ்செய்து அதன் அடித்தளத்தின் மீது சரித்திரம் என்னும் கட்டிடம் எழுப்பப்பட வேண்டுமென்றும் இப்னு கல்தூன் முதன்முதலாக வரலாற்றின் போக்கை மாற்றியமைத்தார். அதாவது, மனித சமுதாயத்தின் தத்துவ நூலாகவே இப்னு கல்தூன் சரித்திரத்தை மாற்றிவிட்டார், நாகரீகம், மனிதவர்க்கம், இவ்விரண்டிற்குமுள்ள தொடர்புகள், அவற்றைப் பற்றிய பிரச்சினைகள், விளக்கங்கள், இவை அனைத்தையும் ஒரு புதிய விஞ்ஞானமாக இப்னு கல்தூன் கண்டுபிடித்தார். இந்த அதிசயமான கவர்ச்சி நிறைந்த புதிய கண்டுபிடிப்பில், தாமே முதலிடம் பெற்றதாகவும் அவர் பெருமைப்படுகிறார். அதைக் கண்டுபிடித்து, அதற்கென விதிகள், சட்டதிட்டங்கள் அமைத்து, அவற்றை விளக்கிய பெருமையும் அவருக்கே உரியதாகும்.

இவ்வாறான ஆராய்ச்சியிலும், முயற்சியிலும் உருவானதே (Sociology) "உம்ரான்" மனிதவர்க்க நாகரீகக் கலை என்பதாகும். அதை "மனித சமுதாயத்தின் நிலைமைகள்" என்றும் அவர் கூறுகிறார்.

அவரது புதிய வரலாற்று முறையிலே சமுதாயத்தை அவர் ஆராய்கின்றார். கல் தோன்றி மண் தோன்றாக் காலம் முதல், மனிதன் தனி வாழ்க்கையும், குடும்பவாழ்க்கையும், கோத்திர வாழ்க்கையும் நடத்தி, பிறகு குடும்பத் தலைவன், கோத்திரத் தலைவன், அரசன் போன்ற தலைவரின் ஆணைக்கு அடங்கிக் கட்டுப்பாட்டுடன் வாழ ஆரம்பித்ததை விளக்குகின்றார். அரசியல் என்பது எவ்வாறு ஆரம்பமாயிற்று, அதன் பாகுபாடுகள் அதன் நன்மை தீமைகள் முதலியனவற்றைத் தெளிவுபடுத்துகிறார். சமுதாயத்தின் பலமும் பலவீனமும், இளமையும் முதுமையும், உயர்வும் வீழ்ச்சியும் விளக்கப்படுகின்றன. சமுதாயத்தின் பாதுகாவலும், அரசாங்கங்களின் வீழ்ச்சியும் அழிவும் அவற்றின் அறிகுறிகளும் விவரிக்கப்படுகின்றன.

மேலும், அரசாங்கத்தாலும், தொழில் தேடும் துறையாலும், வியாபாரத்தாலும், மனித சமூகம் எவ்வாறு பாதிக்கப்படுகின்றது என்பதையும் விளக்கம் செய்கின்றார்.

இனி, அவரது மூன்று முக்கிய நூல்களைப்பற்றி விமர்சனம் செய்வோம் :—

1. முன்னுரை (முகத்தமா-Prolegomena)

இவ்வாறு புதிய முறையில் அமைந்த நூலின் "முன்னுரை" யில் மனித சமுதாயத்தின் நாகரீகத் தத்துவார்த்தங்களை இப்னு கல்தூன் ஆறு அத்தியாயங்களாகப் பிரிக்கின்றார்.

1. மனித சமுதாயம்-அதன் பகுதிகள். அதன் வேலைகள்.

2. நாடோடிச் சமுதாய நிலை-கோத்திர நிலை. மிலேச்ச இனங்கள்.

3. அரசியல்—கிலாபத், ஆட்சி, நிர்வாகம், அரசர் கடமைகள்.

4. நாகரிக சமுதாயம்-நாடுகள். நகரங்கள்.

5. வாழ்க்கை வழிகள்-வியாபாரங்கள் எப்படி வாழவேண்டும்?

6. விஞ்ஞான அறிவியல் துறைகள்-அவை சம்பந்தமான அறிவைப் பெறுவது எவ்வாறு?

இவ்வாறன பிரிவுகளுடன் மனித வர்க்கத்தின் அறிவியல் தத்துவத்தைத் தெளிவுடனும், திறமையுடனும் பகுத்தும், வகுத்தும், தொகுத்தும் ஆராய்கின்றார். சிந்தனையிலும், விளக்கத்திலும் இந்தத் துறையிலே இப்னு கல்தூன் மூல ஆசிரியராக விளங்குகின்றார். "சமுதாய இயல்" (Sociology) என்ற கலை ஐரோப்பாவிலே சென்ற நூற்றாண்டில் தான் நல்லிடம் பெற்றது என்பதை நாம் நோக்கும் பொழுது, அதற்கு ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் அந்தக் கலையைக் கண்டுபிடித்த இப்னு கல்தூனுடைய பெருமையை நாம் நன்கு உணரலாம்.

இந்த "முன்னுரை" யிலே அவர் சரித்திரத்தின் பலனையும், அதன் பாகங்களையும் விளக்கி, பாரபட்சமில்லாமல் வரலாறு எழுதப்படல் வேண்டுமென்று கூறுகின்றார்.

பிறகு, தமது தலைப்புக்களை எடுத்துக்கொண்டு முதல் அத்தியாயத்திலே மனித சமுதாயமானது, வெப்ப தட்ப நிலைகளுக்கேற்றபடி மாறுகிறதென்று கூறுகின்றார்.

இரண்டாம் அத்தியாயத்திலே, நாடோடிச் சமுதாய நிலையையும், அதன் குணுதிசயங்களையும் நகர வாழ்க்கையுடன் ஒப்பிடுகின்ருர். இந்த விளக்கத்தில் அவரது ஒரு மூலக் கொள்கையான அரசியல் வன்மை—அஸபிய்யா—என்பது உருவாகின்றது. இந்த வன்மைதான் குடும்ப, கோத்திர, அரசாங்க ஆதிபத்தியத்திற்கு அடிப்படை என்றும், இந்த வன்மை நான்கு தலைமுறைக்கு நீடிக்குமென்றும், பிறகு அது மாறிவிடுகிறதென்றும் கூறுகிருர். இது அரசியல் வன்மையாக (Sovereignty) மாறி, வெற்றிக் கோலம் பூண்டு, தோற்கடிக்கப்பட்ட மக்களை வெற்றியாளரின் நாகரீகத்தைப் பின்பற்றும்படி செய்துவிடுகிறதென்றும் அவர் அபிப்பிராயப்படுகின்ருர்.

மூன்ரும் அத்தியாயத்திலே ராஜ்யம், ராஜ்யாதிகாரம் (State and Sovereignty) இவற்றைவிளக்கி இந்த அதிகாரம் அஸபிய்யா என்ற வன்மையால் பெறவேண்டிய தொன்ருகும் என்கின்ருர். ராஜ்யத்திலே ஒற்றுமை இல்லாவிட்டாலும், சுகபோக வாழ்க்கை வந்து நுழைந்துவிட்டாலும், மூன்று தலைமுறையில், அதாவது, மூன்று நாற்பது ஆண்டுகளில் ராஜ்யாதிகாரம் வீழ்ச்சியடையும் என்று விளக்குகிருர். இது அவருக்கே சொந்தமான மூலக்கருத்தும் கொள்கையுமாகும். இம்மாதிரியாக, சமுதாயக் கொள்கைகளையும், இயக்கங்களையும், உயர்ந்த விதிகளையும், விளக்கி இப்னு கல்தூன் தமது சிந்தனைச் செல்வத்தை மேலான முறையில் வெளியிடுகிருர்.

பிறகு, கிலாபத்தைப் பற்றியும், நேர்வழி நடந்த கிலாபத்தானது, தனியாட்சியாக மாறிவிட்டதைப்

பற்றியும், ராஜ்யாதிகாரத்தின் கடமைகளைப்பற்றியும், மந்திரிகள், வரிகள், அரசாங்க இலாக்காக்கள் ராணுவம், இவைகளைப்பற்றியும் கூறி, அநீதி தலையெடுத்தவுடன், ராஜ்யாதிகாரமும் நாகரீகமும் அழிந்து விடுமென்று மிகத்தெளிவான முறையில் எடுத்துறைக்கின்றார்.

நான்காம் அத்தியாயத்தில், நாகரீக சமுதாயம் நாடுநகரங்கள் இடம் பெறுகின்றன. அவற்றின் ஆரம்பம், அவற்றின் பாகுபாடுகள், வெவ்வேறு நிலைமைகள், வறுமையும் செல்வமும், அவற்றின் பலாபலன்களும்விளக்கப்படுகின்றன. நாகரீகமே சமுதாயத்தின் நோக்க மென்றும், நாகரீகத்தின் உயர்வு பெற்றவுடன் மக்கள் தாழ்ச்சியடைய ஆரம்பித்து விடுகிறார்கள் என்றும் முடிவுகட்டுகின்றார்.

ஐந்தாம் அத்தியாயத்திலே, மக்கள் உயிர்வாழ்வதற்கு உதவியாக இருக்கும் பல தொழில்களை விளக்கி, வியாபாரம், பண்டங்களின் வரவு செலவு, விலை வாசிகள், முதலியவற்றால் செல்வப்பெருக்கு ஏற்படுகின்றதென்றும், மருத்துவம், நெசவு, கட்டிடக்கலை, விவசாயம் முதலியவற்றைவிவரிக்கின்றார்.

ஆறும் அத்தியாயத்திலே, விஞ்ஞானங்கள், கல்வி இவற்றை விளக்குகின்றார். கல்வியே நாகரீகத்தின் அடிப்படை என்றும், கல்வி உயர்ந்தால் நாகரீகம் உயர்வடையும் என்றும் கூறுகிறார். பிறகு, மதசம்பந்தமானதும், சமுதாய சம்பந்தமானதுமான அறிவியல் துறைகளை விளக்கி தத்துவசாஸ்திரத்தை ஒதுக்கித்தள்ளி, கல்வியையும், கலைஞர்களையும் புகழ்ந்து இலக்கியத்தின் பல துறைகளையும் தெளிவுடன் விளக்குகின்றார்.

இந்த "முன்னுரை" யைப்பற்றி அல்மக்ரிஸீ,

"அது ஒப்புவமையில்லாததொரு ஆக்கநூல். பிறர் சாதிக்க முடியாத செயல். விஞ்ஞான அறிவுப் பொக்கிஷம். தூய்மையான சிந்தனையின் வெளித்தோற்றம். பொருள்கள், நிகழ்ச்சிகள், செய்திகள், இவற்றின் உண்மைப் பொருளை அது வெளிப்படுத்துகின்றது. உலகின் நிலைமையை அது விளக்குகின்றது. அதிசயமான போற்றத்தக்க எளிய நடையிலே, எல்லா உயிர்களின் மூலத்தையும் அது வெளிப்படுத்துகின்றது." என்கிறார்.

"தூனிஸிய அறிவாளி (இப்னு கல்தூன்) ஆழ்ந்த பொருளியல் வல்லுநர், தத்துவாசிரியர். சமுதாய மாற்றங்களின் இரகசியங்களை ஊடுருவி அறியும் ஆற்றல் படைத்தவர். அவர் காலத்தில் வேறு எவருக்கும் தெரியாத தொலை நோக்கும், ஒவ்வொரு விஷயத்தின் பலாபலன்களைப் பரிசீலனை செய்யும் திறமையும் நாம் அவரது அருமையான நூலிலே கண்கூடாகக் காண்கின்றோம்." என்று கொலோசியோ என்பவர் கூறுகிறார்.

"அது உலக சட்டங்களின் தொகுப்பு. அக்காலக் கலைகளின் பல்கலைக் களஞ்சியம் சமுதாய இயலைப்பற்றிய ஆராய்ச்சிக்கு வேண்டிய எல்லா விஷயங்களும் அதில் அடங்கியுள்ளன. அதன் தொகுப்பு முறையானது — குறிப்பாக சிறப்புள்ளதாகவும் — உண்மையான விஞ்ஞான ரீதியிலும் அமைந்துள்ளது" என்றும் அவர் உலகிற்குத் தந்த பூர்வாங்கமான கருத்துக்களும் மூலக் கொள்கைகளும் பல நூற்றுண்டுகள் கழிந்த பிறகே

நாகரீக உலகம் அறிய முடிந்ததென்றும் மவ்னியர் என்ற பிரெஞ்சு அறிஞர் போற்றுகிருர்.

உலக வரலாற்றை எழுதிய மேதைகளிலே இப்னு கல்தூனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்றும், அவரது "முன்னுரை" யில் அவரது, புத்தம் புதிய மூலக்கொள்கைகள் மாட்சியுடன் காட்சியளிக்கின்றன என்றும், மனித குலத்தின் சரித்திரப்பாதையிலே அவரது முடிந்த பழுத்த ஆராய்ச்சியின் முடிவுகளைத் தாராளமாக அள்ளிக் கொடுக்கின்ருர் என்றும், சரித்திரத்தை மனித சமுதாயத்தைப்பற்றிய கலையாக்கி இப்னு கல்தூன் விரித்துவிட்டார் என்றும், அமெரிக்காவில் கார்னல் பல்கலைக்கழகப் பேராசிரியர் நதானியல் ஸ்மித் என்பவர் புகழ்மாலை சாற்றுகின்ருர்.

பதினைந்தாம் கிறிஸ்தவ நூற்ருண்டிலே ஐரோப்பியர் சரித்திரக்கலை இன்னதென்றுஅறியாத நிலைமையில் இருந்தார்கள். அப்பொழுது இப்னு கல்தூன் தமது "முன்னுரை" யில் தெளிவாகவும், விரிவாகவும், விளக்கிய பிரச்சினைகளெல்லாம் தற்கால உலகிலே சரித்திராசிரியர்களுக்கு உறு துணையாக இருக்கின்றன என்றும் இந்தப் பேராசியரே ஒப்புக்கொள்ளுகிருர்.

எனவே, மனித சமுதாயத்தைப் பற்றிய கலையான, "சமுதாய இயல்" (Sociology) அல்-உம்ரான்-ஸோஷியாலஜி என்ற கலையைக் கண்டுபிடித்தவர் இப்னு கல்தூன் என்பவரே என்பதும், அதை விளக்குவதிலும் அவரே சிறந்தவர் என்பதும், இவரதுகண்டுபிடிப்புகளே, இன்று மேலைநாடுகளில், சமுதாய இயல், வரலாற்றுத்

தத்துவம், அரசியல், பொருளாதாரம், என்ற பலதுறைகளாக விரிவடைந்திருக்கின்றனஎன்பதும் தெளிவாகின்றதல்லவா ?

### உலக வரலாறு — கிதாபுல் இபர்

இவரது உலக வரலாற்று நூலுக்கு "கிதாபுல் இபர்" (Kitabul Ibar) என்று பெயர். இது மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

முதற்பாகத்தில், சமுதாயத்தையும், ராஜ்யாதிகாரம், தொழில், வியாபாரம், விஞ்ஞானங்கள், அவற்றின் காரணங்கள் ஆகியவற்றின் பலாபலன்களையும், "முன்னுரை" யாக எழுதினர்.

இரண்டாம் பாகத்திலே, அரபியர், ஸீரியர், பாரசீகர், யூதர், கிப்தியர், கிரேக்கர், ரோமர், துருக்கியர், பறங்கிகள் ஆகியோரின் சரித்திரம் எழுதினர்.

மூன்றும் பாகத்தில், பர்பர் இனத்தைச் சேர்ந்த பல்வகைக் கோத்திரங்கள், அவர்களது வட ஆப்பிரிக்க ராஜ்யங்களின் வரலாறு ஆகியவற்றைப் பற்றி எழுதிமுடித்தார்.

எளிய நடையும், சந்தேகமில்லாத விளக்கங்களும், விரிவான வர்ணனைகளும், உயர்ந்த மூலக் கருத்துக்களும், சில இடங்களில் சொல் சித்திரங்களும், இவரதுநூலை அழகுபடுத்துகின்றன.

இந்த நூலில், ஒவ்வொரு ராஜ்யத்தின் வரலாறும் தனித்தனியாக எழுதப்பட்டது. ஒவ்வொரு பாகத்திலும், ஒவ்வொரு பிரிவிலும் பல அத்தியாயங்கள் உள்ளன.

இப்னு கல்தூன், எகிப்து நாட்டிற்கு வரு முன்னரே அவர் தமது நூல்களை எழுதிமுடித்து விட்டார். ஆனால், எகிப்துக்கு வந்தபிறகும், அவற்றைத் திருத்தியும், கூட்டியும் எழுதினர்.

இப்னு கல்தூனுடைய சரித்திரத்திலே ஸ்பெயின் நாட்டின் சரித்திரமும் இடம் பெறுகிறது. அந்த நாட்டைப் பற்றி அவர் எழுதிய வரலாற்றின் உயர்வைப்பற்றிப் புகழ்ந்து,

"அதனோடு ஒப்பிடுவதற்கு மத்திய காலங் களில் கிறிஸ்தவ இலக்கியத்தில் ஒன்றுமே இல்லை. (இவர் ஸ்பெயின் நாட்டுக் கிறிஸ்தவர்களின் சரிதையைத் தெளிவான முறையில் எழுதியதைப் போல்) இவ்வளவு தெளிவான முறையில் எந்த முஸ்லிம் அரசாங்கத்தைப் பற்றியும் ஒரு கிறிஸ்தவ ரேனும் எழுதவில்லை" என்று டோஸி (Dozy) என்ற மேல்நாட்டுச் சரித்திராசிரியர் கூறுகிறார்.

### அல் தாரிப் சுயசரிதை

நூலின் இறுதியிலே மூன்றும் பாகமாக, அவர் தமது சுயசரிதையை எழுதினர். அதாவது, அவரது பிறப்பிலிருந்து, அவரது எகிப்திய வாழ்க்கை முடியும்வரை, ஹி. 797 (கி. பி. 1394) வரை எழுதி முடித்தார். இதற்கு முன் ஹதீதுக் கலையுடன் தொடர்புள்ள முஸ்லிம்கள் தங்கள் சுயசரிதையை ஒருவாறு எழுதிவைத்திருக்கின்றார் கள். ஆனல், தமது ஆயுள் முழுவதையும் ஒரு பெரிய புத்தகமாக எழுதி, பிறர் அறியமுடியாத தமது அந்தரங்கமான செயல்களையும் குறைகளையும் வெளியிட்ட முஸ்லிம் சிந்தனையாளரில் இப்னு கல்தூனே முதலிடம் பெறுகிறார்.

அவரது வாழ்க்கை வரலாறும் அக்கால வட ஆப்பிரிக்கா முஸ்லிம் அரசாங்கங்களின் வரலாறுகளும் இணைக்கப்பட்டிருந்தன அல்லவா? ஏறத்தாழ முக்கால் நூற்றுண்டுவரை நீடித்த இவரது வாழ்க்கை வரலாறு சரித்திராசிரியர்களுக்கு உதவியாகின்றது. இந்த சுயசரிதைக்கு அல்-தாரிப் (Al-Taarif) என்று பெயரிட்டுத் தாம் ஸ்பெயின் நாட்டில் பிறந்து, ஆப்பிரிக்காவில் வளர்ந்து, பல உத்தியோகங்களில் அமர்ந்து, பிறகு, எகிப்தில் வசித்ததைக் குறிப்பிட்டு விளக்கஞ்செய்கின்ருர். இதை அவர் இறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்வரை, அதாவது ஹி. 807 (கி. பி. 1404) முடிய எழுதி முடித்தார்.

இந்த சுயசரிதையின் மூலமாக, இந்தப் பேரறிஞரின் நீண்ட, பலதுறைகளில் கலந்து கொண்ட வாழ்க்கை வரலாறுகள் நமக்குக் கிடைக்கின்றன. அரபி மொழியில் இது சிறந்ததொரு இலக்கியமாகக் கருதப்படுகின்றது. இது அவரது வாழ்க்கையை அப்படியே படம் பிடித்துக்காட்டி விடுகிறது. கள்ளங் கபடில்லாமல், எழுத்தாளரின் குறைகளும் தாராளமாக எழுதப்பட்டிருக்கின்றன. அவரது கல்வி, பொறுமை, துணிவு, ஆற்றல், சொற்பொழிவு, தொலைநோக்கு, ஆழ்ந்த அறிவு, ஆராய்ச்சித் திறன் போன்ற அவரது பெரும்பண்புகள் அந்தச் சுயசரிதையில் விண்மீன்கள் போன்று பிரகாசிக்கின்றன. துன்பங்களும் இன்பங்களும் நிறைந்த அவரது வாழ்க்கை, திடுக்கிடும் சம்பவங்களும், அதிர்ச்சியுண்டாக்கும் நிகழ்ச்சிகளும் நிறைந்த வாழ்க்கை, சிறை வாழ்க்கை, தூதுவர்

வாழ்க்கை, இராணுவ வாழ்க்கை, இலக்கிய வாழ்க்கை இவையெல்லாம் வாசிக்க வாசிக்க நமக்கு இன்பத்தைத் தருகின்றன. அவரது எழுபதாம் வயதிலே திமஷ்க் நகரத்திலே கோட்டை மதிலிலிருந்த கயிற்றின் மூலம் அவர் இறங்கி, ஸுல்தான் தைமூரிடம் சென்றது சாதாரணச் செயலா? துணிச்சலும், வீரமும், அஞ்சாநெஞ்சமும் தன்னம்பிக்கையும், நிறைந்த இந்த வாழ்க்கை ருசிகரமற்ற வாழ்க்கையாகுமா? எனவே, மற்ற சுயசரிதைகளுக்கோர் முன்மாதிரியாக, இனிய நடையில் சொல்லப்பட்ட விளக்க உரையாக, நெஞ்சையள்ளும் நிகழ்ச்சிகள் நிறைந்ததாக, அசாதாரணமான திடுக்கிடும் சம்பவங்கள் உள்ள தாக அவரது சுயசரிதை காட்சியளிக்கின்றது.

## 10. முடிவுரை

இக்காலத்திலே, பல நாட்டார்கள் ஒவ்வொரு விஷயத்திலும் தங்கள் தங்கள் நாடே முன்னேற்ற முடையதென்றும், கண்டுபிடிப்புகளில் தங்கள் நாட்டவரே தலை சிறந்தோரென்றும் விளம்பரப் படுத்த முற்பட்டுவிட்டனர். பொதுவாக மேல் நாட்டாரெல்லாம், தாங்களே உலகில் உயர்ந்தோர் என்று சொல்வது சாதாரணமாகிவிட்டது. “சரித்திரத்தின் தத்துவம்” “சமூக இயலின் கொள்கைகள்” “அரசியல் பொருளாதாரம்” என்ற கலைகளைக் கண்டுபிடித்தோர் நாங்களே, என்று மேல்நாட்டார் பொய்ப்பிரச்சாரம் செய்தார் கள். மேல்நாட்டு இலக்கியங்களை மட்டும் வாசித்த நம்மவரும் அதை நம்பியிருந்தார்கள். ஆனால்,

இந்தக் கலைகளைக் கண்டுபிடித்து, அவற்றைத்தமது "முன்னுரை" யில் இப்னு கல்தூன், பல நூற்றாண்டு களுக்குமுன் மிகவும் தெளிவாகவும், அழுத்தமாக வும் விளக்கிவிட்டார் என்பதை அவர்கள் அறிந்து ஆச்சரியப்பட்டு, வெட்கித் தலைகுனிகின்றார்கள். அவரது நூலைக்கற்ற பிறகே மேல் நாட்டு ஆராய்ச்சியாளர், அவரை "தத்துவமேதை" "நாகரீகத்தின் சரித்திராசிரியர்" "சமூகவியல், பொருளியல் மேதை" என்றெல்லாம் புகழ்ந்து, இந்தத் துறையில் அவரை முதல்வராகவும் ஏற்றுக் கொள்ளுகின்றனர்.

மேல் நாடுகளில், தத்துவார்த்தத்தைப்போல, சமுதாய இயலும் முன்னணியில் வந்த பத்தொன் பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில், அந்தத்துறை யிலும் இப்னு கல்தூனே தங்களுக்கு ஆசிரியர் என்று அரசியல் வாதியும் சரித்திராசிரியருமான மகியவல்லி (Machieavelli) (1469—1527) போன்ற இத்தாலிய பிரெஞ்சு தத்துவாசிரியரும் சமூகநூல் வல்லுனருமான மான்டெஸ்கு (1669—1755), ஆங்கிலப் பொருளியல் வல்லார் ஆதம் ஸ்மித் (1723–1790) பிரெஞ்சு தத்துவஞானி அகஸ்தெ காம்தே (1798—1857) போன்ற மேல் நாட்டு ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொள்ளு கிறார்கள்.

அரிஸ்தாத்தலுடையவும் பிலேட்டோ உடைய வும் அறிவுக்கும் எட்டாத முறையில் தத்துவ இயலைச் சரித்திரத்திலிருந்து இப்னு கல்தூன் நிர் மாணித்தார். மக்கள் எவ்வாறு வேலை செய்கிறார் கள்? எவ்வாறுவருமானம் பெறுகிறார்கள்? தங்களுக்

கிடையில் ஏன் சச்சரவு செய்கிறார்கள்? கூட்டாக ஏன் ஒருதலைவருக்குக்கீழ்ப்படிகிறார்கள்? விஞ்ஞான இலக்கியக்கலைகளைப் பெற ஏன் விரும்புகிறார்கள்? நாகரிகமானது மக்களின் மிலேச்ச நிலைமையிலிருந்து அபிவிருத்தியடைந்து, உச்சநிலையடைந்து பிறகு, ஏன் தாழ்ந்து, மடிந்துவிடுகிறது? என்ற விளக்கமே சரித்திரம் எனப்படும். சமுதாயத்தின் ஆக்கத்தையும், வளர்ச்சியையும், பெருக்கத்தையும் காரணகாரியங்களுடன் விளக்கிய முதல்வர் சந்தேகமில்லாமல் இப்னு கல்தூன் என்று நாம் கூறலாம். நாகரீகத்தின் முன்னேற்றப்பாதையில் ஓர் உள் நிர்வாகம் அமைந்த ஒருமைப்பாட்டைக் கண்டவர் அவரே" — இவ்வாறு புகழ்கின்றார் டீபோயர் என்ற டச்சு அறிஞர்.

"சார்லஸ் டார்வின் (1809—82) என்ற ஆங்கில தாவர அறிஞர் "உயிர்களின் மூலம்" (Origin of Species) என்ற கொள்கையை விளக்கும் பொழுது, உலக சரித்திரத்திலே வெற்றியாளர் தங்களால் தோற்கடிக்கப்பட்ட இனத்தாரை அவர்களது அசல்அடையாளம் தெரியமுடியாதபடி தங்களது கொள்கைகளையும் பழக்கவழக்கங்களையும் புகுத்தி அவர்களை மாற்றிவிடுகிறார்கள் என்று கூறுகின்றார். இதை ஒரு புதிய கொள்கையாக உலகம் மெச்சுகிறது. ஆனால், டார்வினுக்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன் இப்னு கல்தூன் இதைக் கூறிவிட்டார். நாம் இன்றுபோற்றும் "சமூகவியல்" என்பதைத்தான் அவர் எழுதினார்." இவ்வாறு லுட்விக் கம்ப்லாவிக்ஸ் என்னும் ஐரோப்பியர் எழுதுகின்றார்.

"முஸ்லிம் சிந்தனை உலகிலே, தாராள எண்ணம் என்ற வானிலே, பிரகாசமான நட்சத்திர மாக இப்னு கல்தூன் ஒளிவீசுகிறார்" என்று வான் வஸன்டாக் என்ற ஜர்மானிய ஆராய்ச்சியாளர் கூறுகின்றார்.

"நாகரிகத்தின் வரலாற்று ஆசிரியர்" என்று இப்னு கல்தூனை வான் கிரமர் என்ற ஆஸ்திரிய அறிஞர் போற்றுகின்றார்.

கார்ல்மார்க்ஸ் (1818-1883) போன்றோருக்கு வெகுகாலத்திற்கு முன்னரே, பொருளாதாரத் துறையில் அரசாங்கம் தனது கடமையை எவ்வாறு செய்யவேண்டும் என்றும், தொழிலாளிகளின் பாகுபாட்டைப்பற்றியும், சொத்து, கூலி, என்பதைப்பற்றியும் நன்கு விளக்கம் செய்தவர் இப்னு கல்தூனே என்றும், மேல் நாட்டாருக்கு அரசியல் பொருளியல் (political Ecomony) என்ன என்பதை அறியாத காலத்தில், அவர் விளக்குகிறார்" என்றும், கஞேலோ ஸியோா என்பவர் கூறுகிறார்.

வரலாறு துணுக்க ஆராய்ச்சி (Historical Criticism) என்ற முறையில் சரித்திரத்தை ஆராய்ந்து, வரலாறு என்பது எவ்வாறு அமைக்கப் பட்டு எழுதப்படல் வேண்டுமென்றும், அதன் தன்மை, அதன் பரப்பு, அதன் பகுதிகள், அதன் விதிகள், முதலியவற்றை நன்கு ஆராய்ந்த பிறகே சரித்திரம் அமைக்கப்படவேண்டுமென்று அறிந் தோரில் முதன்மையானவர் இப்னு கல்தூனே என்றும், மக்களது சமுதாய வளர்ச்சி, இயற்கை யமைப்பு ஆகியவற்றாலும் சூழ்நிலையின் அடிப்

படையிலும், மக்களுடைய தனிப்பட்ட அல்லது கூட்டான தொடர்பினுலும் சரித்திரம் அமையும் என்று தர்க்க ரீதியுடனும் காரண காரியங்களுடனும் இப்னு கல்தூன் விளக்குகிருர் என்று அறிந்த பிறகே, மேல்நாட்டார் அவரைப் போற்ற ஆரம்பித்திருக்கிருர்கள்.

சரித்திரம் என்ருல், பழங்காலச் செய்திகள் என்றும், கடந்த காலத்தைப் பற்றிய அறிவை பெற்றுக் கொள்வதே அதன் குறிக்கோள் என்றும் கருதப்பட்டது. ஆனுல் சரித்திரம்என்பதற்கு இப்னு கல்தூன் ஒரு புதிய பொருள் அமைத்தார். நிகழ் காலத்தையும் எதிர்காலத்தையும் அறிவதற்குத் துணையாக இருப்பதும், மனித இனத்தின் பல் வேறு வாழ்க்கைத் துறைகளில் பற்பல காலச் சக்கரங்கள் உண்டாதல், தற்செயலாக ஆவதல்ல. ஆனுல், நிரந்தரமான சட்டங்களினுடையவும் காரணங்களினுடையவும் அடிப்படையில் உண்டாகியும், மறைந்தும், எழுந்தும், விழுந்தும், காணப்படுகின்றன என்று முதல் முதலாக உலகில் இவரே இந்த சரித்திர முகவுரையில் விளக்குகிருர். இரண்டாவது, இயற்கையும், நில நூலும் எவ்வாறு மக்கள் வாழ்க்கையைப் பாதிக்கின்றன என்பதை ஆராய்ந்து விளக்கிருர். மூன்ருவது, மனித இனத்தின் மாற்றங்களும், கிளர்ச்சிகளும், இயக்கங்களும் எவ்வாறு சமூக, பொருளாதார நிலைகளின் அடிப்படையில் பிறக்கின்றன என்று ஆராய்கின்ருர்.

சரித்திரத்தையும் மனித இனத்தையும் இப்னு கல்தூன் ஆராய்ச்சிசெய்யும்பொழுது அவருக்கு குர்ஆன் வேதமே உதவி செய்தது குர்ஆனுடைய

மொழியில் சரித்திரத்தை கஸஸ் என்றும், அதன் சட்டங்கள், காரணங்கள், முடிவுகள், இவற்றிற்கு ஸுன்னத்துல் இலாஹி என்றும், இறந்த காலத்திலிருந்து நிகழ் காலத்திற்கும் வருங்காலத்திற்கும் நல்ல முடிவுகளைத் தேடிக் கொள்வதற்கு படிப்பினை, நம்பிக்கை அல்லது பலனடைதல் என்றும் கூறப் படுகிறது.

1. :பக்ஸுஸில் கஸஸ லஅல்லஹும் யத :பக்கரூன் = இந்த மக்கள் ஆராய்ந்து சிந்தனை செய்வதற்காக நீங்கள் செய்திகளை விளக்குங்கள்.

2. இன்ன :பீ தாலிக ல இப்ரதன் லிமன்ய் யக்ஷா = இந்த நிகழ்ச்சிகளில் இறைவனை அஞ்சுவோருக்குப் படிப்பினை இருக்கிறது.

3. :பஃதபிரூ யா ஊலில் அப்ஸார் = கண்ணுள்ளவர்களே! படிப்பினை கற்றுக்கொள்ளுங்கள்

4. குல் ஸீரூ :பில் அர்லி :பன் துரூ கய்:ப கான ஆகிபதுல் முகத்திபீன் – நீங்கள் பூமியில் சஞ்சாரஞ் செய்து, இறைவனை நிராகரித்தோரின் முடிவு என்ன ஆயிற்று என்று பாருங்கள் என்று (நபியே) சொல்வீராக.

மேற்கூறப்பட்ட குர்ஆன் வசனங்களிலிருந்து நாம் அறிவதென்ன? சரித்திரத்தைப் படித்து அதிலிருந்து நிகழ்காலத்திற்கும் வருங்காலத்திற்கும் வேண்டிய பயனை நாம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே.

இன்னும் பார்ப்போம்.

1. ஸுன்னத்துல்லாஹி :பில்லதீன கவ் மின் கப்லு வலன் தஜித லிஸுன்னதில்லாஹி தப்தீலா = இது அல்லாஹ்வின் ஸுன்னத்-நியதி-தஸ்

தூர்—சட்டமாகும். முந்திய மக்களால் இது பின் பற்றப்பட்டது. மேலும், அல்லாஹ்வின் இந்தச் சட்டத்தில் நீர் வேறுபாடு காணமாட்டீர். (அஹ்ஸாப்)

2. ஸுன்னத மன் கத் அர்ஸல்ன கப்லக மிர் ருஸுலினு வலா தஜிது லி ஸுன்னத்தினு தஹ்வீலா = உமக்கு முன்னுல் நாம் அனுப்பிய இறைதூதர்கள் இந்த சட்டப்படியே நடந்தார்கள். நம்முடைய சட்டத் திட்டத்தில் (நபியே!) நீர் வேறுபாடு காணமாட்டீர். (பனீ இஸ்ராயீல்)

இந்த இரண்டு குர்ஆன் வசனங்களிலிருந்து, உலக நிகழ்ச்சிகள் குறிப்பான காரணங்களின் சக்திகளால் உண்டாகின்றன என்றும், இவற்றை இயற்கைச்சட்டங்கள் என்று இறைவன் கூறுகிருன் என்றும் நாம் அறிகிரேம்.

இந்தப் புனிதமான குர்ஆன் வசனங்களின் அடிப்படையில் இப்னுகல்தூன் ஆராய்ச்சி செய்து உண்மையை அறிய முயன்று, அதை விளக்கஞ் செய்து சரித்திரத்தின் தத்துவார்த்தம், மனித குலத்தாரின் உயர்வுதாழ்வுகளின் தத்துவார்த்தம், சமூக, பொருளாதார, அரசியல் ஆகியவற்றின் அடிப்படையைத் தயாரித்தார். அவரது அடிப் படையின் மீது கட்டப்பட்ட கட்டிடம் இன்று நிரந் தரமாக நிற்கின்றது.

இன்றைய முஸ்லிம் வாலிபரின் நிலை என்ன? தம்மைத்தாம் அறியமுடியாத நிலை! பிறர் நமது மூதாதைகளை புகழ்ந்த பிறகே அறியக்கூடிய அவல நிலை!

ஜீவனுள்ள இனத்தாருக்கு பழங்காலச் சரித்திர மும் நிகழ்ச்சிகளும், நிரந்தரமான புத்துணர்ச்சி

அளித்து மறு மலர்ச்சி உண்டாக்கும். இந்த ஊற்றிலிருந்து நவீன ஆவேசம் கிளம்பும். அதனால் தான் இப்னு கல்தூனுடைய வாழ்க்கையால் நமக்குப் பெரும்பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

சரித்திரம் என்பது முஸ்லிம்களால் உண்டாக்கப்பட்டது. மஸ்ஊதி, தப்ரி, இப்னு கல்லிகான், இப்னுல் அதீர், அல் பைரூனி, இப்னு கல்தூன் போன்ற தலைசிறந்த முஸ்லிம் சரித்திராசிரியர்களுக்கு என்றும் உலகில் நல்ல இடமுண்டு.

“சரித்திரத்தின் தத்துவார்த்தம்” என்ற கொள்கையை முதலில் உலகில் எழுதியது இப்னு கல்தூன் என்பவரே. சரித்திரத்தையும் அதனுடன் தொடர்புள்ள நிலநூல், சஞ்சார நூல், வாழ்க்கை வரலாறு, ஆகியவற்றில் முஸ்லிம்கள் எழுதிய நூல்களில் நான்கில் ஒரு பங்குகூட மற்ற இனத்தார் எழுதவில்லை. ஆனால், நாம்? இதை அறியமாட்டோம்! அறிந்தாலும் அவற்றைப் படிக்க மாட்டோம். நமது குழந்தைகள் படிக்கும் படியான வசதிகளும் செய்யமாட்டோம்! நமது கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் இதைப்பற்றி அறிவதற்கும் இடம் கொடுக்கப்படவில்லை.

சரித்திரத்தின் தத்துவார்த்தம் நமது பேராசிரியர்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? ஆம்! சரித்திரம் கற்பிக்கிறார்கள். அவர்களுடைய மாணவர்களும் அதைக் கேட்கிறார்கள். “இஸ்லாமிய சரித்திரம்” என்பது பெரும்பாலாருக்குத் தெரியாது. முஸ்லிமுடைய கல்வியிலே ஒவ்வோர் அடி எடுத்து முன்னேறும்பொழுது குர்ஆன், ஹதீத் இவற்றின் உதவி வேண்டும். அரசியல் தொடர்புள்ளோரின் பொய்க் கதைகளால் மனித வாழ்க்கைக்கு நல்ல பலன் ஏற்படாது.

இறை நம்பிக்கை, உள்ளத் தூய்மை, சிறந்த குண நலன்கள், உயர்ந்த மனப்பான்மை, இவற்றின் அடிப்படையில் அமைந்த கல்வியே நமது குழந்தைகளை சரித்திரக் கல்வியின் மூலமாக இம்மையிலும் மறுமையிலும் உயர்வடையச் செய்யும். இத் தகைய கல்வி பெறுவதற்கு குர்ஆன், ஸுன்னத் இவ்விரண்டுமே உதவி செய்யும் அதாவது, கல்லூரி மாணவன் தனது மூதாதைகளை இழிவாகக் கருதும்படியும் இறைவன் உண்டா என்று சந்தேகிக்கும்படியும் செய்யும் கல்வியால் என்ன பயன்? தனது மேலான பண்பாட்டை அறியாமல், கடன் வாங்கிய பிறர் பண்பாட்டில் பெருமை கொள்ளும் கல்வியும் ஒரு கல்வியா? பாடத்திட்டத்தில் மத போதனை இல்லையேல், அது நிறைவான கல்வி யாகாது. ஆத்மார்த்தமில்லாத அறிவுக்கல்வியால் பயனில்லை.

இப்னு கல்தூனுடைய உயர்வை அறிய வேண்டுமானால் இந்த அடிப்படையில்தான் அறிய வேண்டும். அப்பொழுதுதான் சரித்திரத்துறையிலே அவர் செய்த சீர்திருத்தங்கள், அவருடைய மேன்மை, அவரது அரிய முயற்சி, பரந்த நோக்கம் முதலியவற்றை அறிய முடியும். சரித்திராசிரியர் களின் (இமாம்) தலைவரே இப்னு கல்தூன். அவர் எழுதிய சரித்திரத்தில் ஆங்காங்கு குர்ஆன் வசனங்களை மேற்கோள்களாக எடுத்துக்காட்டு கிறார். அதில் இஸ்லாமிய வண்ணம் இருக்கிறது. மனச்சான்று, இறை நம்பிக்கையின் சக்தி இவற் றின் அடிப்படையில் மதத்தில் உண்மையும் மனிதப் பண்புகளின் சட்டங்களும் அங்கு காணலாம். முஸ்லிம் சரித்திராசிரியர்களில் இஸ்லாமிய சரித்திர கலாச்சார, கல்வி இவைகளின் உயர்விற்கு இவர் எடுத்துக்காட்டாக விளங்கி, நமக்கு நல்லதொரு படிப்பினை கற்பிக்கிறார். இயற்கைச் சட்டங்களுக்கு

ஏற்றதாகவும் கவர்ச்சியாகவும் இவர் சரித்திரத்தை சமர்ப்பித்து மேல்நாட்டு, கீழ்நாட்டு சரித்திராசிரியர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளார்.

இரண்டு உலக யுத்தங்களுக்குப் பிறகு ஐரோப்பிய சிந்தனையாளர் தங்கள் பாடத் திட்டத்தில் மதமும் ஆத்மார்த்தக் கல்வியும் வேண்டும் என்று சொல்லுகிறுர்கள். ஆனல், சில கீழ்நாட்டு அரசாங்கங்கள் மதச் சார்பற்றதாக இருக்க விரும்புகின்றன.

இவரது பொது வாழ்க்கையின் தொடக்கத்திலே இவர் புகழை விரும்பியதைப்போல் தோன்றுகிறது. பிந்திய வாழ்க்கையில் புகழை விரும்பாமல் ஒரு மாணவராக, மனித இனத்தின் தொண்டராக பணியாற்றினுர். புகழானது நிழலைப் போன்றது. ஒரு மனிதனுக்குப் பின்னல் சூரியன் இருந்தால் அவனுடைய நிழல் அவனுக்கு எதிராக இருக்கும். அந்த நிழலை எட்டிப்பிடிக்க அவன் முயன்ருல் அது அவனுக்கு முன்னல் போய்க்கொண்டே இருக்கும். ஆனல், அதை விரும்பாமல் அவன் முதுகுப்புறம் திரும்பி நடந்தால், அதே நிழல் அவனைத் தொடர்ந்து வரும். இதைப்போன்றது தான் புகழும். புகழைத் தேடுவோருக்கு அது கிடைப்பதரிது. அதை வேண்டாதாரைத் தொடர்ந்து செல்லுமாம்.

> இன்பத்துள் இன்பம் விழையான் துன்பத்துள்
> துன்பம் உறுதல் இலன்.

இன்பத்தை இன்பமாகக் கொள்ளாதானுக்குத் துன்பம் வந்தால் அது துன்பமாகாது.

> வினைக்கடன் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
> தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.

நாம் ஒரு வேலையில் ஈடுபட்டிருக்கையில் முயற்சியைக் கைவிடலாகாது. அரைகுறை வேலையை விட்டுவிடுவோரை உலகும் கைவிட்டுவிடும்.

எண்ணிய எண்ணியாங் கெய்தும் எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.
இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல்.

என்ற குறளடிகள் இப்னு கல்தூனுடைய வாழ்க்கைச் சிறப்புகளை விளக்குகின்றன.

இப்னு கல்தூன், சமூகநூல் ஆராய்ச்சியில் தனியான வேட்கை நிறைந்தவர். அப்பேரின்பத்திலே அமர்ந்திருக்கும் பொழுதெல்லாம், வெளி உலகத்தை முற்றும் மறந்திருப்பார். மறக்க முடியாத பெருந்தொண்டு புரிந்தவர். சமூகவியல்மீது அவருக்கு இருந்த காதல் அவரை அதனோடு இரண்டறக் கலந்துவிடும்படி செய்துவிட்டது. அறிவுத் துறையில் அவருக்கிருந்த ஆர்வமானது, அரசியலை வெறுக்கும்படி செய்தது. வாழ்வில் எளிமையும், எண்ணத்தில் உயர்வும் உள்ளவர். சமூகவியல் என்னும் உண்மையை உலகிற்கு உணர்த்திய உயர்ந்த இமயச் சிகரம். சிறந்த குறிக்கோளே அழியாத் தன்மைக்கு அடிகோலும் என்ற கொள்கையுள்ளவர். உயர்ந்த குறிக்கோளை மக்களிடையில் பரப்புவதே மனிதத்தன்மையை உலகில் நிறுவுவதாகும் என்ற எண்ணமுள்ளவர். நல்லெண்ணங்களை நெஞ்சில் உலவச் செய்தவர். நல்லொழுக்க நெறியில் நின்று தமது சொற்பொழிவுகளின் மூலம் மாணவருக்கு நல்லொழுக்கம் கற்பித்த ஆசிரியர்.

மெய்ப்பொருளை உணர்த்தி, வாழ்வின் முற்போக்குப் பாதையில் நம்மை நடத்திச் செல்லும் பெரியாரைப் போற்றுவோமாக!

—————

## ஸையித் இப்ராஹீம் எம் ஏ, [illegible]
## ஜமால் முஹம்மத் கல்லூரி, திருச்சி

I,L:148

### எழுதிய நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | முஹம்மத் (ஸல்) பரிசுப் பதிப்பு | | [illegible] |
| | ,, மலிவுப் பதிப்பு | | [illegible]00 |
| 2. | ஹஸ்ரத் அபூ பக்கர் | (ரலி) | 1—50 |
| 3. | ,, உமர் | ,, | 1—50 |
| 4. | ,, உஸ்மான் | ,, | 1—50 |
| 5. | ,, அலீ | ,, | 1—50 |
| 6. | ,, காலித் பின் வலீத் | ,, | 1—50 |
| 7. | ,, ஸல்மான் பார்ஸி | ,, | 0—75 |
| 8. | ,, பிலால் | ,, | 0—75 |
| 9. | ஸுல்தான் ஸலாஹுத்தீன் | | 1—00 |
| 10. | தளபதி தாரிக் பின் ஜியாத் | | 0—75 |
| 11. | உமர் பின் அப்துல் அஜீஸ் | | 0—75 |
| 12. | ராபியா பஸ்ரீ | (ரஹ்) | 0—75 |
| 13. | இமாம் அபூ ஹனீபா | ,, | 0—75 |
| 14. | இமாம் கஸ்ஸாலீ | ,, | 1—00 |
| 15. | மன்ஸூர் ஹல்லாஜ் | ,, | 1—00 |
| 16. | இக்பாலின் முறையீடும் மறுமொழியும் | | 0—75 |
| 17. | இஸ்லாம் காட்டிய அரசியல் | | 1—00 |
| 18. | உலகம் போற்றும் உத்தம நபி | | 1—00 |
| 19. | இஸ்லாமியக் கதை விருந்து | | 0—75 |
| 20. | முஸ்லிம் கதைக்கொத்து | | 0—50 |
| 21. | அண்ணல் நபி | | 0—50 |
| 22. | இஸ்லாமிய வீரப் பெருமக்கள் | | 1—00 |
| 23. | குர்ஆன் மணிமொழிகள் | | 1—00 |
| 24. | நபிநாயகம் நல்லுரைகள் | | 0—75 |
| 25. | வளர்மதி நீதிக் கதைகள் | | 0—50 |
| 26. | பாத்திமா நாயகி | | 1—00 |
| 27. | இஸ்லாமும் அதன் உட்பிரிவுகளும் | | 1—00 |
| 28. | ஜிஹாத் | | 0—50 |
| 29. | ஸஹாபாக்கள் (நாயகத்தோழர்கள்) சிறப்பு | | 0—50 |
| 30. | கதீஜா பிராட்டியார் | | 1—00 |
| 31. | அரபு நாட்டுக் கதைகள் | | 0—75 |
| 32. | பாரசீகக் கதைகள் | | 0—75 |
| 33. | பாலர் கதைகள் | | 0—50 |
| 34. | நகைச்சுவைக் கதைகள் | | 0—50 |
| 35. | இந்தியக் கதைகள் | | 0—50 |
| 36. | சிறுவர் அறிவுரைகள் | | 0—25 |
| 37. | இப்னு ஸீனா | | 0—75 |
| 38. | இப்னு கல்தூன் | | 0—75 |